விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 27
ஒலி 004 வள்ளுவர் ஆண்டு 2056 மார்கழி 08 செவ்வாய்க்கிழமை (23.12.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## தையிட்டி தமிழ் மக்களின் சொத்து பௌத்த ஆக்கிரமிப்பை உடன் நிறுத்து

### யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டம்



(யாழ்ப்பாணம்)

தமிழர் தாயகத்தில் அத்துமீறி பௌத்த சின்னங்கள் அமைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் சட்டவிரோத மாக தையிட்டி திஸ்ஸ விகாரை அமைக் கப்பட்டதற்கு எதிர்ப் 15ஆம் பக்கம் பார்க்க

கொழும்பு – கே.கே.எஸ்

## யாழ்தேவி ரயில் நாளை முதல் சேவையில்

(கொழும்பு)

கொழும்பு - கே.கே.எஸ் இடையிலான யாழ்தேவி புகையிரதம் நாளை முதல் சேவை யில் ஈடுபடவுள்ளது.

அதற்கமைய நாளை (24) முதல் வடக்கு ரயில் மார்க்கத்தில் கொழும்பு கோட்டை யிலிருந்து காங்கேசன்துறை வரை யாழ்தேவி ரயிலை சேவையில் 15ஆம் பக்கம் பார்க்க

# மோடியின் பிரதிநிதி ஜெய்சங்கர் கொழும்பை வந்தடைந்தார்

### அநுர, சஜித், தமிழ்ப் பிரதிநிதிகளை இன்று சந்தித்துக் கலந்துரையாடுவார்

(கொழும்பு)

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் கலாநிதி சுப்ர மணியம் ஜெய்சங்கர் நேற்று கொழும்பை வந்தடைந்தார். பாரதப் பிரதமர் மோடியின்விசேடபிரதிநிதியாகஜெய்சங்கர் இலங்கை விஜயத்தினை மேற்கொண்டுள் ளார்.

(16ஆம் பக்கம் பார்க்க)



பாடசாலைகளுக்கு

## இன்று முதல் விடுமுறை

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் அரச மற்றும் அரச அங்கீ காரம் பெற்ற தனியார் பாட சாலைகளுக்கு இன்று (23) முதல் 15ஆம் பக்கம் பார்க்க

ஆவரங்காலில்

## சேற்றில் புதையுண்ட இளைஞன் பலி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஆவரங் கால் பகுதியில் உள்ள கடல்நீரேரியில் மீன் பிடித் 15ஆம் பக்கம் பார்க்க

## வேலன் சுவாமிகள் யாழ்.போதனாவில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

சிவகுரு ஆதீன முதல் வரும் பொத்துவில் தொடக் கம் பொலிகண்டி வரை யிலான மக்கள் பேரெ ழுச்சி இயக்கத்தின் ஒருங் கிணைப்பாளருமான தவத் திரு வேலன் சுவாமிகள் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டுள்ளார்.

தையிட்டி சட்டவிரோத விகாரைக்கு எதிரான நேற்று முன்தினம் போராட்டத் தின்போது மதகுரு எனவும் பாராது வேலன் சுவாமிகள் வலுக்கட்டாயமாக பொலிஸா 15ஆம் பக்கம் பார்க்க

## விகாரைக்குத் தேவையான காணியைத் தவிர மிகுதி தமிழ் மக்களுக்கு வழங்கப்படும்

### திஸ்ஸ ரஜமஹா விகாராதிபதி

(கொழும்பு)

திஸ்ஸ விகாரைக்குத் தேவையான காணியை வைத்துக் கொண்டு மிகுதி காணியை தமிழ் மக்களுக்கு வழங்கி பிரச்சினைக்குத் தீர்வு காண்பது சிறந்ததாக அமையும் என திஸ்ஸ ரஜ மஹா விகாரையின் விகாரா திபதி கிந்தொட்ட நந்தாராம தேரர் தெரிவித்தார்.

யாழ் - தையிட்டி திஸ்ஸ ரஜமஹா விகாரையின் விகா ராதிபதி கிந்தொட்ட நந்தா ராம தேரருக்கு அமரபுர ஸ்ரீ கல்யாணவங்ச நிகாய உத் தரலங்கா உப பிரதான சங்க நாயக்க எனும் பதவி கடந்த ஞாயிற்றுக்கிழமை (21) கொழும்பில் வைத்து வழங் கப்பட்டது.

இந்நிகழ்வில் எதிர்க்கட் சித் தலைவர் சஜித் பிரேம 15ஆம் பக்கம் பார்க்க

## வேலன் சுவாமிகளின் கைது மிகுந்த வேதனை தருகிறது

### ஜனாதிபதி உடன் தலையிட வேண்டும் கலாநிதி ஆறு.திருமுருகன் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

தையிட்டி திஸ்ஸ விகா ரைப் பகுதியில் நேற்று முன் தினம் (21) இடம்பெற்ற சம்பவம் மிகுந்த வேதனை அளிப்பதாக அகில இலங்கை இந்து மாமன்ற உப தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள் விடுத்த அறிக் கையில் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்த அறிக்கை 04ஆம் பக்கம் பார்க்க

## டித்வா புயல் தாக்கத்தால் 4.1 பில்லியன் நேரடி சேதம்

### உலக வங்கி அறிக்கை

(கொழும்பு)

கடந்த நவம்பர் இறுதி யில் இலங்கையைத் தாக் கிய 'டித்வா' புயல் தாக்கம் காரணமாக கட்டிடங்கள், விவசாயம் மற்றும் உட் கட்டமைப்பு வசதிகளுக்கு சுமார் 4.1 பில்லியன் அமெ ரிக்க டொலர் நேரடிச் சேதம் ஏற்பட்டுள்ளதாக உலக வங்கி தெரிவித்துள்ளது.

இதுகுறித்து உலக வங்கி விடுத்துள்ள அறிக்கையொன் றில் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையின் அண்மைக் கால 15ஆம் பக்கம் பார்க்க

ஐஸ் போதையுடன்

## யாழ்ப்பாணத்தில் இளைஞன் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் ஐஸ் போதைப்பொருளுடன் இளைஞன் ஒருவர் நேற்று பொலிஸாரால் கைது செய் யப்பட்டுள்ளார்.

நல்லூர் மூத்த விநாய கர் கோவிலடியை சேர்ந்த 02ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 45 ஆம் நாள் சபிண்டீகரண அழைப்பும் நன்றி நவிலலும்



கடந்த 09.11.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது
குடும்பத்தின் அணையா விளக்கு

## அமரர் இராசதுரை நிஷாந்தன்

அவர்களின் அந்தியேட்டிக்கிரியை நிகழ்வுகள் நேற்று முன்தினம் (21.12.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 07.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து இன்று (23.12.2025) செவ்வாய்க்கிழமை பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நடைபெற இருப்பதனால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் பிரிவுத் துயர் கேட்டு தொலைபேசி மூலமாக அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மலர் வளையங்கள், கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள், பதாதைகள் மூலம் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் தேவையறிந்து செயற்பட்ட அயலவர், நண்பர்கள், உற்றார், உறவினர்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும் (6362)

காளிகோவிலடி,
அராலி தெற்கு,
வட்டுக்கோட்டை.
077 128 7309
075 576 6808
தகவல்:
குடும்பத்தினர்

# பணியாளர் தேவை

சட்டத்தரணி அலுவலகத்தில் லிகிதராக (Clerk) பணியாற்ற ஒருவர் தேவை. (1830)

தொடர்புகளுக்கு:
**070 600 5622**

# யாழ்ப்பாணத்தில்...

இளைஞனே 2 கிராம் 120 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட இளைஞனை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்துப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7,33)

# மணமகள் தேவை

கனடாவில் வசிக்கும் (Canada Citizen) 1988ம் ஆண்டு சதய நட்சத்திரம் கிரகபாவம் முதற்சுற்று 24 மூன்று சுற்று சேர்த்து 60 உடன் கூடிய மணமகனுக்கு மணமகள் தேவை. (6357)

தொடர்புகளுக்கு: **076 526 8660**

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 076 636 3378 | 076 097 3127

# ST. JOHN'S COLLEGE, JAFFNA
# VACANCY

Applications are hereby invited from qualified persons (preferably graduates in the relevant field) for the following vacancy:

**Teacher – Information & Communication Technology (ICT)**
**(English / Tamil Medium) - Grade 6 - A/L Classes**

Send your complete CV with the contact details of two non-related referees, along with photocopies of the certificates of your academic qualifications, by registered post to the address given below before 29th December 2025.

Please indicate "**Applications / ICT Teacher**" at the top left-hand corner of the envelope.

*(Only shortlisted candidates will be called for an interview)*

The Principal,
St. John's College,
Jaffna.
(C-4648)

# 1 ஆம் ஆண்டு ஆத்ம சாந்தி பிரார்த்தனை அழைப்பு



தோற்றம் 08 . 05 . 1936

மறைவு 04 . 12 . 2024

கடந்த 04.12.2024 (புதன்கிழமை) அன்று சிவபதமடைந்த
எங்கள் குடும்பத்தலைவி

## அமரர் செல்லம்மா அரியரத்தினம்

திதி : சதுர்த்தி

தலைவியாய் தரணி போற்றும் தாயாய்
நிலந்தனிலே என்றும் நிறைவோடு வாழ்ந்தீரே!
நன்றாய் வளர்த்து நல்லவழிகள் காட்டியெம்மை
வாழ வைத்த தெய்வமே
என்றினி உங்கள் எழில் வதனம் காண்போம்....

அவர்களின் முதலாம் ஆண்டு ஆத்மசாந்திப் பிரார்த்தனை(திவசம்) இன்று 23.12.2025 செவ்வாய்க்கிழமை மு.ப 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அந் நிகழ்வில் கலந்து கொண்டு அன்னாரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

அங்களப்பாய் வீதி,
இணுவில் கிழக்கு, இணுவில். (1828)
தகவல் :
குடும்பத்தினர்

# நன்றி நவிலல்



பேராசிரியை
## திருமதி துஷ்யந்தி மிகுந்தன்

அன்னை மடியில்
21.04.1964
ஆண்டவன் அடியில்
23.11.2025

திதி: விசுவாவசு வருடம்
கார்த்திகை மாத
பூர்வபக்க திருதியை

உசன், மிருசுவில் கிராமத்தில் பேரம்பலம் தெய்வானைப்பிள்ளை தம்பதியருக்கு மகளாகப் பிறந்த அமரர் பேராசிரியை திருமதி துஷ்யந்தி மிகுந்தன் அவர்களின் அன்புக்கும் பாசத்திற்கும் உரிய மாணவர்கள், ஆசிரியர்கள், நண்பர்கள், உறவினர் அனைவருக்கும் அவர் வாழ்ந்த காலத்தில் அவருடன் கூடிக்குலாவி அன்பினை ஈய்ந்த நல்லுள்ளங்கள் அனைவருக்கும் அவர் தீராத நோயினால் அவதிப்பட்ட காலங்களில் அவரை அரவணைத்து பராமரித்து ஆலோசனை வழங்கிய யாழ்ப்பாண போதனா வைத்தியசாலை பணிப்பாளர், வைத்திய நிபுணர்கள் மற்றும் மருத்துவர்கள், தாதிமார்கள், சுகாதாரப் பணியாளர்கள், அலுவலர்கள், தெல்லிப்பளை புற்றுநோய் வைத்தியசாலை மருத்துவர்கள், தாதிமார்கள், சுகாதாரப் பணியாளர்கள், அலுவலர்கள், ஆசிறி வைத்தியசாலை, யாழ்கோல் வைத்தியசாலையின் பொறுப்பாளர், வைத்திய நிபுணர்கள், பணியாளர்கள் அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் மறைவினால் ஆறாத்துயர் அடைந்த வேளையிலும் இறுதி யாத்திரையிலும் கலந்து கொண்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்விசார், கல்விசாரா நண்பர்கள், நிர்வாக உத்தியோகத்தர்கள், விவசாய பீட மாணவர்கள் அனைவருக்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெற்ற அஞ்சலி நிகழ்வினை ஒழுங்கமைத்த விவசாய பீட நலன்புரிவோர் சங்கம், அனுமதியளித்த கலைப்பீடாதிபதி மற்றும் கலந்து கொண்டோர் அனைவருக்கும் தொலைபேசி, வட்ஸப் மற்றும் முகப்புத்தகம் மூலமாகவும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் சிரந்தாழ்த்தி நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். எம்குல தேவதையின் விருப்புக்கிணங்க அந்தியேட்டி நிகழ்வுகள் 22-23.12.2025 கீரிமலையிலும் அவர்தம் மனையிலும் சாஸ்திர சம்பிரதாயத்துடன் நடைபெற்று மதியபோசன நிகழ்வுகள் தாய், தந்தையை, சுற்றத்தையிழந்து வாழும் மழலைகளுடன் இணைந்து கொண்டாடப்படுகின்றது என்பதனையும் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கின்றோம். (இ)

நன்றி

கணவன், பிள்ளைகள்,
மருமக்கள் மற்றும் குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் கடன் கொடுப்பனவுகளை இடைநிறுத்துமாறு நிபுணர்கள் கோரிக்கை

**(கொழும்பு) ..........................................................**
**டித்வா புயலினால் ஏற்பட்ட அழிவுகளை எதிர்கொள்வதற்காக இலங்கையின் வெளிநாட்டு கடன் கொடுப்பனவுகளை இடை நிறுத்துமாறு உலகின் முன்னணி பொருளாதார ஆய்வாளர்கள் குழு கோரிக்கை விடுத்துள்ளது.**

நோபல் பரிசு வென்ற ஜோசப் ஸ்டிக்லிட்ஸ் உட்பட உலகின் முன்னணி பொரு ளாதார நிபுணர்கள் 120 பேர் கொண்ட குழுவினால் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டு ள்ளதாக வெளிநாட்டு ஊட கங்கள் செய்தி வெளியிட்டு ள்ளன.

இந்த இயற்கைச் சீற்றத்தி னால் இலங்கை முழுவதும் 600 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர் மற்றும் பல்லாயிரக்கணக்கான வீடு கள் அழிக்கப்பட்டுள்ளன.

2022இல் இலங்கை தனது கடனைத் திருப்பிச் செலுத்த முடியாமல் போன தைத் தொடர்ந்து, கடந்த ஆண்டு நீடித்த பேச்சுவார்த் தைகளுக்குப் பிறகு 9 பில்லி யன் அமெரிக்க டொலர் தேசியக் கடன் மறுசீரமைக் கப்பட்டது.

எவ்வாறாயினும் இல ங்கை வரி செலுத்துவோர் மீதான இந்த கடன் சுமை இன்னும் தாங்க முடியாத அளவிலேயே இருப்பதாக வளர்ச்சி ஆர்வலர்கள் எச்ச ரித்திருந்தனர்.

சூறாவளி தாக்குவதற்கு முன்பே, இலங்கையின் வரு டாந்த கடன் கொடுப்பனவுகள் அரசாங்க வருவாயில் 25% ஆக இருக்கும் என்று எதிர் பார்க்கப்பட்டது.

இது சர்வதேச தரத்தின்படி மிக அதிகமான அளவாகும்.

ஜோசப் ஸ்டிக்லிட்ஸ், ஜெயதி கோஷ், தோமஸ் பிகெட்டி, மார்ட்டின் குஸ்மான் மற்றும் கேட் ராவொர்த் உள்ளிட்ட 120 உலகளாவிய நிபுணர்கள் கையொப்பமிட்ட அறிக்கையில் இலங்கையின் வெளிநாட்டு இறையாண் மைக் கடன் கொடுப்பனவு களை உடனடியாக நிறுத்தி வைக்க வேண்டும் என வலி யுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் சுற்றுச்சூழல் அழிவின் அளவைக் கருத் தில் கொண்டு, கடன் சுமை யைக் கையாளக்கூடிய நிலைக்குக் கொண்டுவர புதிய கடன் மறுசீரமைப்பு அவசியம் என்றும் சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து ஏற்கனவே கூடுதல் கடன் பெறப்பட்டு வரும் நிலையில், பேரிடர் மீட்புப் பணிகளு க்காக மேலும் கடன் வாங்க வேண்டிய சூழல் உருவாகி யுள்ளது.

இது நாட்டின் நிதி இடை வெளியை மேலும் பாதிக்கும் என்றும் குறிப்பிட்டுள் ளது.

மேலும் "இலங்கை இப் போது சூறாவளி, வெள்ளம் மற்றும் மண்சரிவுகளால் ஒரு கடுமையான பொருளாதார அதிர்ச்சியை எதிர்கொள்கின் றது. இது உட்கட்டமைப்பு மற்றும் வாழ்வாதாரங்களு க்கு பெரும் சேதத்தை ஏற்படு த்தியுள்ளதாக" பொருளாதார நிபுணர்கள் குழு தெரிவித் துள்ளது. (நி)

## ரில்வின் இந்தியா விஜயம்



(கொழும்பு)
மக்கள் விடுதலை முன் னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா எதிர்வரும் ஜனவரி மாதமே இந்தியா செல் லவுள்ளார் என்று தெரிவிக் கப்பட்டுள்ளது.

முன்னதாக அவர் நவம்பர் மாத இறுதியில் இந்தியா செல் வதாக இருந்தது. ஆனால், டித் வா சூறாவளியை அடுத்து ஏற் பட்ட பேரிடரால் அவரின் பய ணம் பிற்போடப்பட்டது. இந்நி லையில் ரில்வின் சில்வா ஜன வரி மாதம் இந்தியா செல்வார் என்று கூறப்படுகின்றது.

இதன்போது, உயர்மட்ட சந்திப்புகளில் பங்கேற்கும் அவர், மாவட்ட சபைகள் முறைமை அல்லது மக்களால் தெரிவு செய்யப்படும் நிறைவேற்று அதிகார ஆளுநர் முறைமை ஊடாக மாகாண சபை முறை மையைப் பதிலீடு செய்வதற்கான அரசாங்கத்தின் ஆலோசனை குறித்து கலந்துரையாடுவார் என்று கூறப்படுகின்றது. (நி)

## அயர்லாந்தில் காலநிலை தூதுவர் விருது பெற்ற இலங்கைத் தமிழர்



(அயர்லாந்து)

யாழ் மாவட்டத்தின் ஊர் காவற்றுறையைப் பிறப்பிட மாகக் கொண்ட இலங்கைத் தமிழரான ஜெயால்ட் அன்ரனி இராசரத்தினம் அவர்களுக்கு அண்மையில் அயர்லாந்து நாட்டில் அவரது காலநிலை மாற்றம் (Climate change) மற்றும் காலநிலை நீதி (Climate Justice ) தொடர் பான பணிகளை அங்கீகரித்து, The National Trust for Ireland (An Taisce) அமைப்பு காலநிலை தூதுவர் " Climate Ambassador" என்ற விருதை வழங்கியுள் ளார்கள்.

இந்த விருது, காலநிலை மாற்றம் போன்ற உலகளா விய சவால்களுக்கு எதிராக அவர் மேற்கொண்ட சுற்றுச் சூழல் பாதுகாப்பு, நிலைத்த சமூக வளர்ச்சிக்காக செய்த முய ற்சிகள், விழிப்புணர்வு நட வடிக்கைகள் மற்றும் சர்வதேச அளவிலான பங்களிப்பு அத்துடன் Local Tidy Towns குழுக்களுடன் இணைந்து செய்த தொண்டு மற்றும் சமூக ஈடுபாட்டு பணிகள், Organic Farms and Community Gar dens ஆகியவற்றை ஊக்கு வித்து இந்த விருது வழங் கப்பட்டது. (நி)

## அம்பலாங்கொடையில் துப்பாக்கி சூடு
### ஒருவர் உயிரிழப்பு

(கொழும்பு)
அம்பலாங்கொடை நகரில் உள்ள ஒரு வர்த்தக நிலையத்தின் முகாமை யாளர் மேலாளர் நேற்றுக் காலை சுட்டுக் கொல்லப் பட்டார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு நபர்களால் இந்தத் துப்பாக்கிப் பிர யோகம் முன்னெடுக்கப் பட்டதுடன், சந்தேக நபர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.

இரண்டு போட்டி குற்றக் கும்பல்களுக்கு இடையி லான மோதலின் விளை வாக இந்த துப்பாக்கிச் சூடு நடந்ததாக முதற்கட்ட விசா ரணைகள் தெரிவிக்கின் றன.

சம்பவம் குறித்தும் சந் தேக நபர்களைக் கைது செய்வதற்கும் அம்பலாங் கொடை பொலிஸார் மேல திக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (நி)

## ஒன்லைன் மோசடிகள் அதிகரிப்பு
### கணனி அவசர தயார் நிலைக்குழு எச்சரிக்கை

(கொழும்பு)
ஒன்லைனில் பொரு ட்களை விற்பனை செய்வ தாகக் கூறி பல்வேறு நபர் கள் செய்யும் நிதி மோச டிகள் அதிகரித்துள்ளதாக இலங்கை கணனி அவசர தயார் நிலைக் குழு தெரி வித்துள்ளது.

ஒன்லைனில் பொரு ட்களை கொள்முதல் ஓடர் செய்வதற்கு முன், பொது மக்கள் சம்பந் தப்பட்ட நிறுவனம் பற்றிய துல்லி யமான மற்றும் நம்ப கமான தகவல்களை சரி பார்க்க வேண்டும் என்று இலங்கை கணனி அவசர தயார் நிலைக் குழுவின் தலைமை தகவல் பாதுகாப்பு பொறியியலாளர் நிரோஷ் ஆனந்த குறிப்பிட்டார்.

இதேவேளை, அனர்த்த ங்களால் பாதிக்கப்பட்ட மக்க ளுக்கு நிதி உதவி வழங் குவது தொடர்பாக மோசடி கள் இடம் பெற்றுள்ளதாக கடந்த சில நாட்களாக முறைப்பாடுகள் கிடைத்துள் ளதாகவும் அவர் தெரி வித்தார்.

எனவே, பண்டிகைக் காலத்தில் ஒன்லைனில் பொருட்களை வாங்கும் போது பொது மக்கள் அவ தானத்துடன் இருக்கு மாறும் கேட்டுக் கொள்ள ப்பட்டுள்ளது. (நி)

## வேலைக்காக வெளிநாடு சென்றவர்களின் எண்ணிக்கை 3 லட்சத்தை தாண்டியது
### இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் தகவல்

(கொழும்பு)
இந்த வருடம் வேலைக் காக வெளிநாடு சென்ற இல ங்கையர்களின் எண் ணிக்கை 3 இலட்சத்தை விஞ்சியுள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலை வாய் ப்பு பணியகம் தெரிவித் துள்ளது.

இந்த ஆண்டு 3 இலட் சம் இலங்கையர்களை வெளிநாடுகளுக்கு வேலை வாய்ப்புக்காக அனுப்பும் இலக்கை ஏற்கனவே அடை ந்துவிட்டதாகவும் பணி யகம் சுட்டிக்காட்டியுள் ளது.


கடந்த 10 ஆண்டுகளில் தொழிலாளர்களின் எண் ணிக்கை 3 இலட்சத்தை தாண்டியது இது மூன்றா வது முறையாகும்.

இதற்கு முன்பு 2024 ஆம் ஆண்டில் 314,673 தொழிலாளர்கள் வேலைக் காக வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர்.

2025 ஆம் ஆண்டில், 184,085 ஆண் தொழி லாளர்களும் 116,106 பெண் தொழிலாளர்களும் வேலை க்காக வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய மட்ட மெய்வல்லுநர் போட்டியில் தங்கம் வென்ற யாழ். வீரர்கள்



சுசீந்திரகுமார் மிதுன்ராஜ்



சிவகுமார் பிரகாஸ்ராஜ்

அகில இலங்கை இளைஞர் கழகங்களுக்கு இடையிலான 35 ஆவது தேசிய மட்ட மெய்வல்லுநர் போட்டி தியகம மஹிந்த ராஜபக்ஷ மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

இதில் ஆண்களுக்கான குண்டு எறிதல் மற்றும் தட்டெறிதல் போட்டிகளில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த இரு வீரர்கள் தங்கப் பதக்கங்களைக் கைப்பற்றி சாதனை படைத்துள்ளனர்.

அந்த வகையில் ஆண்களுக்கான குண்டு எறிதல் போட்டியில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவனும் பருத்தித்துறை ஐக்கிய இளைஞர் கழக வீரருமான சுசீந்திரகுமார் மிதுன்ராஜ் 15.28 மீற்றர் தூரம் எறிந்து தங்கப் பதக்கத்தை கைப்பற்றியுள்ளார்.

அத்துடன் ஆண்களுக்கான தட்டெறிதல் போட்டியில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவனும் பருத்தித்துறை ஐக்கிய இளைஞர் கழக வீரருமான சிவகுமார் பிரகாஸ்ராஜ் யாழ். மாவட்ட இளைஞர் கழகத்தை பிரதிநிதித்துவம் செய்து 46.52 மீற்றர் தூரம் எறிந்து புதிய சாதனையை பதிவு செய்து தங்கப் பதக்கத்தை கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3-90)

# ஜூனியர் ஆசிய கிண்ணத் தொடர் பாகிஸ்தான் வசமானது!




19 வயதுக்குட்பட்டோருக்கான ஆசியக் கிண்ண கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டியில் பாகிஸ்தான் அணி 191 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்று கிண்ணத்தை சுவீகரித்துள்ளது.

டுபாயில் நடைபெற்ற குறித்த போட்டியில் இந்திய மற்றும் பாகிஸ்தான் அணிகள் மோதின.

இதன்படி போட்டியின் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபட தீர்மானித்தது.

இதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகளை இழந்து 347 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் பாகிஸ்தான் அணியின் சார்பில் சமீர் மின்ஹாஸ் 172 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றுக்கொடுத்தார்.

இந்நிலையில் 348 ஓட்டங்கள் எனும் வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 26.2 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 156 ஓட்டங்களை மாத்திரம் பெற்று தோல்வியைத் தழுவியது.

இதற்கமைய 2025 ஆம் ஆண்டுக்கான 19 வயதுக்குட்பட்டோருக்கான ஆசியக் கிண்ணத்தைப் பாகிஸ்தான் அணி தன்வசப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)

# மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான

## டெஸ்ட் தொடரை கைப்பற்றிய நியூசிலாந்து

மேற்கிந்தியத் தீவுகள் மற்றும் நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான மூன்றாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் நியூசிலாந்து அணி 323 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

குறித்த போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற நியூசிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

அதன்படி தமது முதலாவது இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 8 விக்கெட்டுகளை இழந்து 575 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்திக் கொண்டது.

துடுப்பாட்டத்தில் டெவோன் கோன்வே 227 ஓட்டங்களையும் டோம் லேதம் 137 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் ஜெய்டன் சீல்ஸ், எண்டர்சன் பிலிப் மற்றும் ஜஸ்டின் கிரீவ்ஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை கைப்பற்றினர்.

இதனையடுத்து தமது முதலாவது இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 420 ஓட்டங்களைப் பெற்று சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

துடுப்பாட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணியின் கவேம் ஹொட்ஜ் 123 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார்.

பின்னர் 155 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த நியுசிலாந்து அணி 2 விக்கெட்டுகளை இழந்து 306 ஓட்டங்களை பெற்ற நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்திக் கொண்டது.

இந்நிலையில் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு 462 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

இதன்படி வெற்றி இலக்கை நோக்கி இரண்டாவது இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 138 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்து தோல்வியைத் தழுவியது.

இதற்கமைய 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 2-0 என்ற அடிப்படையில் நியூசிலாந்து அணி கைப்பற்றியுள்ளது. (3)

# இலங்கையுடனான ரி-20 தொடரை வெற்றியுடன் ஆரம்பித்த இந்தியா!



இந்தியா சென்றுள்ள இலங்கை பெண்கள் கிரிக்கெட் அணி 5 போட்டிகள் கொண்ட ரி-20 தொடரில் விளையாடுகிறது.

இந்நிலையில், இரு அணிகள் இடையிலான முதலாவது ரி-20 போட்டி ஆந்திரா மாநிலம் விசாகப்பட்டினத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. நாணய சுழற்சியில் வென்ற இந்திய அணி பந்துவீச்சை தேர்வு செய்தது.

அதன்படி, முதலில் ஆடிய இலங்கை அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 6 விக்கெட்டுக்கு 121 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. இந்திய அணி வீராங்கனைகள் சிறப்பாக பந்து வீசி இலங்கை அணியை கட்டுப்படுத்தினர்.

இதையடுத்து 122 ஓட்டங்கள் என்ற இலக்குடன் இந்திய அணி களமிறங்கியது. ஷபாலி வர்மா 9 ஓட்டங்களும், ஸ்மிருதி மந்தனா 25 ஓட்டங்களும் எடுத்தனர்.

ஜெமிமா ரோட்ரிக்ஸ் அதிரடியாக ஆடி ஓட்டங்களைக் குவித்து அரை சதம் கடந்தார்.

இறுதியில், இந்திய பெண்கள் அணி 14.4 ஓவரில் 2 விக்கெட்டுக்கு 122 ஓட்டங்கள் எடுத்து அபார வெற்றி பெற்றது. அத்துடன் ரி-20 தொடரில் இந்திய அணி 1-0 என முன்னிலை வகிக்கிறது. (3)

## வேலன்...

வருமாறு,

தையிட்டியில் பொதுமக்களின் நிலத்தில் அமைக்கப்பட்ட பௌத்த விகாரை தொடர்பாக தொடர்ந்து பிரச்சினைகள் அதிகரித்துள்ளது. இப்பிரச்சினையை ஆராய்ந்து உடன் தீர்வு காண வேண்டிய பொறுப்பு ஜனாதிபதி அவர்களுக்கு உரியது.

தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களையும் வலி.வடக்கு பிரதேச சபைத் தலைவரையும் அழைத்து இப்பிரச்சினைக்கான தீர்வினை ஏற்படுத்துவது அவசியம் ஆகும்.

போர்ச்சூழலில் உயர்பாதுகாப்பு வலயத்துள் அகப்பட்ட சைவ ஆலயங்கள் சில இன்னும் விடுவிக்கப்படாமல் உள்ளன. பலாலி விநாயகர் ஆலயம், கீரிமலை ஆதிச் சிவன் கோயில், சடையம்மாமடம், காங்கேசன்துறை - பலாலி வீதி திருகோணச்சத்திரம், கதிரவெளி முருகன் கோவில் கடந்த முப்பத்தைந்து ஆண்டு காலமாக பூசை இல்லாமல் பக்தர்கள் சென்று வழிபாடு செய்ய முடியாமல் இருக்கிறது.

இந்நிலையில் புதிய பௌத்த ஆலயங்கள் மக்களின் நிலங்களில் உருவாக்கப்படுவது பிரச்சினைகளை அதிகரிக்குமே ஒழிய அமைதியை ஏற்படுத்தாது. சைவமக்கள் பௌத்த மதத்திற்கு எதிரானவர்கள் அல்ல. எனவே மக்களின் மனதை வேதனைப்படுத்தாது அரசு உடன் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

உங்கள் பதவிக்காலத்தில் பல விடயங்களைத் தீர்த்து வைப்பீர்கள் என்று மக்கள் எதிர்பார்த்து இருந்த [illegible] தையிட்டி விவகாரம் [illegible] ஏமாற்றமாக உள்ளது.

தையிட்டி விடயம் தொடர்பாக அகிம்சை வழியில் நின்று எதிர்ப்புத் தெரிவித்தவர்களை கைது செய்யும்போது கையாண்ட முறை கவலைக்குரியது. குறிப்பாக தவத்திரு வேலன் சுவாமிகளை கைது செய்யும் போது கையாண்ட முறை மிக கவலையை அளிக்கிறது.

எனவே இத்தகைய விடயங்கள் தொடராமல் இவ் விடயத்தில் உடன் அக்கறை செலுத்துமாறு சைவ மக்கள் சார்பில் தங்களிடம் வேண்டிக்கொள்கிறோம் என்றுள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இரணைமடுக் குளத்திலிருந்து

# குடிநீரைப் பெற்றுக் கொள்வதற்கு

## கிளி.அரச அதிபரிடம் மகஜர் கையளிப்பு



(தருமபுரம்)

இரணைமடுக்குளத்திலிருந்து கிளிநொச்சிக்கான குடிநீரைப்பெற்றுக்கொள்வதற்கான அடையாளம் காட்டப்பட்ட மூன்று இடங்களிலிருந்து நீரைப்பெறுவதற்கு ஒப்புதல் கடிதத்தை கிளிநொச்சி மாவட்ட அரச அதிபரிடம் இரணைமடு கமக்காரர் அமைப்புக்களின் சம்மேளன பிரதிநிதிகள் மகஜர் ஒன்றை நேற்றைய தினம் கையளித்திருந்தனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் குடிநீர் தேவையைப்பூர்த்தி செய்வதற்கு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபை கிளிநொச்சி குளத்திலிருந்து நீரைப் பெற்று சுத்திகரித்து மக்களுக்கு வழங்குகின்றது. கிளிநொச்சி குளத்தின் நீரின் தரம் மழை காலங்களில் குறைவாக காணப்படுகின்ற நிலையில் இரணைமடுக்குளத்திலிருந்து நீரைப்பெற்றுக்கொள்வதற்கு இரணைமடு கமக்காரர் அமைப்புக்களின் சம்மேளனம் அமைப்புக்களுடனும் மாகாண நீர்ப்பாசன பணிப்பாளர், பிரதி நீர்ப்பாசன பணிப்பாளர், பொறியியலாளர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலைத் தொடர்ந்து மூன்று இடங்களை அடையாளங்காட்டியிருந்தனர். கிளிநொச்சிகுளம் வான் பாய்கின்ற பகுதி, கோவிந்தன் கடை சந்தி, தற்போது திருவையாறு ஏற்று நீர்ப்பாசனம் இயங்கி வருகின்ற பகுதி என்பவற்றை அடையாளங்காட்டி அதற்கான ஒப்புதலை மாவட்ட அரச அதிபரிடம் மகஜராக கையளித்திருந்தனர்.(8-316)

### கிளிநொச்சியில்

## பெண்தொழில் முயற்சியாளர்களின் விற்பனைக் கண்காட்சி



(கிளிநொச்சி)

பெண்கள் தேசிய நிலையத்தின் ஏற்பாட்டில்,பெண் தொழில் முயற்சியாளர்களின் உற்பத்திப் பொருட்களின் விற்பனையும் கண்காட்சியும் நேற்றைய தினம் கிளிநொச்சி நகரில் அமைந்துள்ள பெண்கள் தேசிய நிலைய வளாகத்தில், பெண்கள் தேசிய நிலையத்தின் பிரதிப்பணிப்பாளர் அ.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரனும், சிறப்பு விருந்தினராக பெண்கள் வாழ்வுரிமைச் சங்கத்தின் பணிப்பாளர் வல்லிபுரம் வாசுகி ஆகியோரும் கலந்து கொண்டு குறித்த விற்பனைக் கண் காட்சியை ஆரம்பித்து வைத்தனர்.

உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிக்கும் நோக்குடன், பெண்களுடைய உற்பத்தி பொருட்களுக்கு சந்தை வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்கும் முகமாக ஆரம்பமாகியுள்ள பெண் தொழில் முயற்சியாளர்களின் விற்பனை மற்றும் கண்காட்சி இன்றைய தினமும் நடைபெறவுள்ளது.

இங்கு பெண் தொழில் முயற்சியாளர்களுக்காக பத்துக்கும் மேற்பட்ட கண்காட்சி கூடங்கள் நிறுவப்பட்டுள்ளதுடன், அவர்கள் தமது உற்பத்திப் பொருட்களை காட்சிப்படுத்தியுள்ளனர்.

இந் நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர், மாவட்ட புள்ளி விபரவியலாளர், மாவட்ட செயலக கணக்காளர், மாவட்ட பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர், பெண்கள் தேசிய நிலையத்தின் உத்தியோகத்தர்கள், தொழில் முயற்சியாளர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டிருந்தனர். (8)

### பாதிக்கப்பட்ட மக்களுக்கான

# புதிய வீடமைப்பு தொகுதிகளை

## நிர்மாணிப்பதற்கான திட்டங்கள் முன்னெடுப்பு

(கொழும்பு)

டித்வா சூறாவளியினால் சேதமடைந்த வீடுகளுக்குப் பதிலாக புதிய வீடமைப்புத் தொகுதிகளை நிர்மாணிப்பதற்கான திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் நீர்வழங்கல் அமைச்சர் சுசில் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று அமைச்சில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதற்காக மாவட்டச் செயலாளர்கள் ஊடாக மாற்று நிலங்கள் ஏற்கனவே அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சூறாவளி காரணமாக 6,000 இற்கும் மேற்பட்ட வீடுகள் முழுமையாகவும், ஒரு இலட்சத்திற்கும் அதிகமான வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.

வீடுகள் சேதமடையாவிட்டாலும், சில பகுதிகள் தொடர்ந்தும் வசிப்பதற்கு பாதுகாப்பற்றவை என அடையாளம் காணப்பட்டுள்ளன. அத்தகைய பகுதிகளில் உள்ள மக்களை மீள் குடியேற்றுவது கட்டாயமாகும்.

பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையைக் குறுகிய காலத்திற்குள் வழமைக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும். பல இடங்களில் வீடமைப்புத் தொகுதிகளை நிர்மாணிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான நிதி வசதிகளை வழங்குவதற்கு ஜனாதிபதி செயலகம் இணைந்து செயற்படுவதுடன், அமைச்சின் அதிகாரிகள் மற்றும் தொழில் நுட்ப வல்லுநர்களுடன் இணைந்து முதற் கட்ட திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன.

மீண்டும் இவ்வாறானதொரு அனர்த்தம் ஏற்படும் போது பாதிப்புகளைத் தவிர்க்கும் நோக்கில், அதிக அவதானமிக்க பகுதிகளில் உள்ள மக்களைப் பாதுகாப்பான இடங்களில் குடியேற்ற முன்னுரிமை அளிக்கப்படும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (8)

### "வலம்புரி" போல் வலம்புரியாய் வாழி நீ பல்லாண்டு



வட புலத்தின் வலம்புரியை
வாழ்த்துக் கவி செய்து வணங்குகிறேன்
திடமான சிந்தனைகள் பரப்பி
தேசமெங்கும் வலம் வருகின்றாய்!
தடல் புடலாய் யுத்தங்கள் நடந்த
தமிழ் மண்ணின் கதைசொல்லும் வலம்புரியே!
உரிமை பெற்று தமிழர் வாழ
உவகையுடன் நாளும் எழுதுகின்றாய்
பெருமை உன்னில் என்னவென்றால்
பேரறிய அறமதனை விரித்து எழுதுகிறாய்
அருமை மிகு செய்திகளைச் சுமந்து
ஆதவன் போல் நீ எழுந்து வருவாய்
சிறுமைத்தனங்களை ஒழிப்பதற்கு
சீறி எழும் வலம்புரியே உனை வணங்குகிறேன்
நீதியான வாழ்வுக்காய் ஆயிரம்
நிஜங்களை சொல்லி எழுதுகின்றாய்
ஆதியான தமிழர் மரபுகளை
அரவணைத்து காவல் செய்கின்றாய்
சோதி போல பிரகாசித்து நாளும்
சுந்தரத் தமிழுக்கு ஏற்றங்கள் காட்டுகிறாய்
விஜயன் போல் சொல்லம்புடன் எழுந்து
விடுதலைக்காய் உழைத்து நிமிர்கின்றாய்
சாதி மத பேதமதை மண்ணில் ஒழித்து
சரித்திரம் படைக்கின்ற வலம்புரியே
மார்கழியில் வந்துதித்த மன்னவனே!
வலம்புரி போல் வலம்புரியாய் வாழி நீ!

**செந்நாப்புலவர், வர்ணனைக் கலாநிதி**
**மதுரகவி.காரை. எம்.பி அருளானந்தன்**

### "வலம்புரி" வாழ்க பல்லாண்டே!

மக்களின் பிரச்சினையை விவாதிக்கும் ஆலடி மாநாடு!
மதிநுட்பம் நிறைந்ததுவாய் மனங்கவர் விதத்தினிலே
மக்களின் வினாக்களுக்கு விடையளிக்கும் வியாசர் பதில்!
மிகவும் இலகுவாம் நடையினிலே தருகின்ற
மக்களின் கருத்து நிறை ஆசிரியத் தலையங்கம்!
மருத்துவத் தகவல்கள் வழிமுறைகள் நிறைந்தது வாய்
மக்களின் சுகநலன் மேம்படுத்தும் கட்டுரைகள்!
மகத்தான பணியாற்றும் வலம்புரியே நீ வாழ்க!

மக்களின் இலக்கியத் தாகம் தீர்க்கும் நாவல்கள்!
மலர்ச்சி பெறும் விதமாக வழிகள் பல தருகின்ற
மக்களின் விவசாயத் தொழில்சார் தகவல்கள்!
மனது நிறை வாழ்வதனை அமைத்து வாழ்ந்திடவே
மக்களின் ஆன்மிக வளர்ச்சிக்காம் குறிப்புகள்!
மகத்துவம் மிக்கதுவாம் ஊடகப் பணியினிலே
மக்களின் குரலாக மலர்கின்ற வலம்புரியே
மனங்களிலே நிறைந்து நீ வாழ்க பல்லாண்டே!


நாயன்மார்க்கட்டு
ப.மகேந்திரதாசன்

### 27ல் கால் பதித் தாய்

26 ஐ கடந் தாய்
27 ல் கால் பதித் தாய்
பெற்றெடுத்தாள் பதிப்பகத் தாய்
"வலம்புரி" எனும் பத்திரிகைத் தாய்
உலகின் செய்திகள் தந் தாய்
உலகத் தோர் போற்றிட சிறந் தாய்
புதிய கருத்துக்கள் சேர்த் தாய்
புதுமை படைக்கப் பிறந் தாய்
தரணி யெலாம் தமிழ் வளர்த் தாய்
தமி ளோர் மனங்களில் நிறைந் தாய்
ஆல மரம் போல் வளர்ந் தாய்
ஆயிரம் பேர் இளைப்பாற இடம் கொடுத் தாய்
நடுவு நிலை நன்நெறி காத் தாய்
நீண்டு நிலைத்து வாழ் வாய்

**சாந்தையூரிவன்,**
**தி.ராம்குமார்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வரலாற்றுச் சிறப்புமிக்க பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலய மார்கழி வைகுண்ட ஏகாதசி மகோற்சவம் நேற்று திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. (படம்:- சிவசாந்தன்)

# கரைதுறைப்பற்று பிரதேசசபை புதிய தவிசாளராக புஸ்பானந்தன்

(நெளுக்குளம்)

முல்லைத்தீவு மாவட்ட கரைத்துறைப்பற்று பிரதேச சபையின் புதிய தவிசாளர் தெரிவு நேற்றைய தினம் கரைதுறைப்பற்று பிரதேசசபையில் இடம்பெற்றது. இந்நிலையில் புதிய தவிசாளராக பெரும்பான்மை வாக்குகளுடன் இமக்குலேற்றா புஸ்பானந்தன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

2025 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் கரைதுறைப்பற்று பிரதேச சபையில் சின்னராசா லோகேஸ்வரன் தவிசாளராக தெரிவு செய்யப்பட்டதுடன், உப தவிசாளராக ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் யோகேஷ்வரன் அனோஜன், தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

இந்நிலையில் கரைதுறைப் பற்று பிரதேசசபையில் தவிசாளராக கடமையாற்றிய சி.லோகேஸ்வரன் கட்சியின் நடவடிக்கை காரணமாக 25.11.2025 அன்று தனது பதவியினை இராஜினாமா செய்வதாக உள்ளூராட்சி மன்ற உதவி ஆணையாளர் அலுவலகத்திற்கு அனுப்பிய கடிதத்தினை தொடர்ந்து உப தவிசாளர் சபையினை நடாத்தி வந்திருந்தார்.

இந் நிலையில் புதிய தவிசாளரை தேர்தெடுப்பது தொடர்பில் நேற்றைய தினம் வடமாகாண உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எஸ்.சுதர்சன் தலைமையில் தெரிவுக் கூட்டம் இடம்பெற்றது.

இந் நிலையில் தவிசாளர் பதவி போட்டிக்கு இமக்குலேற்றா புஸ்பானந்தன், தொம்மைப்புள்ளை பபுல்ராஜ், மிக்கேற்பிள்ளை ஜோன்சன் மோகனராஜா ஆகிய மூவரும் பரிந்துரைக்கப்பட்ட நிலையில் இமக்குலேற்றா புஸ்பானந்தன் மற்றும் தொம்மைப்புள்ளை பபுல்ராஜ் இடையில் போட்டி நிலவியது.

இதனையடுத்து மேற்கொள்ளப்பட்ட இரகசிய வாக்கெடுப்பில் தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் இமக்குலேற்றா புஸ்பானந்தன் 14 வாக்குகளை பெற்று புதிய தவிசாளராக தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (8-299)

## தொழிற்பயிற்சி கற்கைநெறிகளுக்கான
# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழிற் பயிற்சி அதிகாரசபையானது 2026 ஆம் ஆண்டு முதலாம் அரையாண்டிற்கான முழு நேர கற்கை நெறிகள் 01.01.2026 ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளன. இக்கற்கைநெறிகள் யாழ்ப்பாணம், கைதடி, காரைநகர், வல்வெட்டித்துறை, பண்டத்தரிப்பு, சுன்னாகம் தொழிற்பயிற்சி நிலையங்களில் நடைபெற்று வருகின்றன.

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியலாளர், மின்னிணைப்பாளர், கணிய அளவையாளர், விருந்தினர் வரவேற்பாளர், வெதுப்பாளர், சமையலாளர், அறைபராமரிப்பு சேவையாளர், நீர்க்குழாய் பொருத்துநர், மோட்டார் சைக்கிள் பொறிவலர், அலுமினியம் பொருத்துநர், உணவு மற்றும் குளிர்பானம் பரிமாறுபவர், குழந்தை பராமரிப்பாளர், பெண்கள் சிறுவர்களிற்கான ஆடை வடிவமைப்பாளர் , சிகையலங்கரிப்பாளார், அழகுக்கலை வல்லுநர், விரைவு சேவை உணவு வழங்குநர், முதியோர் பராமரிப்பாளர், டீசல், பெற்றோல் வாகன இயந்திர பொறிவலர் ,கட்டட நிர்மாண உதவியாளர், கணனி வன்பொருள் திருத்துநர், போன்ற கற்கை நெறிகளிற்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

இக்கற்கைநெறிகள் அனைத்தும் தேசிய தொழில் தகைமை மட்டம்4 (NVQ-4) சான்றிதழுக்கான பயிற்சிநெறிகளாகும் கற்க விரும்புவோர் தங்கள் பதிவுகளை எதிர்வரும் 31.12.2025 ஆம் திகதிக்கு முன்னர் மாவட்ட அலுவலகம், 4 ஆம் மாடி, வீர சிங்கம் மண்டபம், இல 12 கே.கே. எஸ் வீதி யாழ்ப்பாணம் அல்லது அனைத்து தொழிற்பயிற்சி நிலையங்களிலும் மேற்கொள்ள முடியும்.

மேலதிக விபரங்களினை பெற்றுக் கொள்வதற்கு 021 222 7949, 071 031 8737, 077 613 9302 என்னும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ள முடியும் எனப் பிரதிப்பணிப்பாளர் கு.நிரஞ்சன் அறிவித்துள்ளார். (8)

## வடக்கு மாகாண

# பெண் சுய தொழில் முயற்சியார்களின் கண்காட்சியும் தேசிய ஒருமைப்பாட்டுத் தின நிகழ்வும்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண மகளிர் விவகாரம் மற்றும் வர்த்தக வாணிப அமைச்சினால் "வடக்கு மாகாண பெண் சுய தொழில் முயற்சியாளர்களின் கண்காட்சியும் தேசிய ஒருமைப்பாட்டு தின நிகழ்வும் இன்றும் நாளையும் யாழ். பிரதம தபால் அலுவலக வளாக முற்றத்தில் இடம்பெறவுள்ளது.

ஆரம்ப நிகழ்வு இன்று செவ்வாய்க் கிழமை முற்கபல் 11 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் முத்துலிங்கம் நந்தகோபாலன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில், பிரதம விருந்தினர்களாக வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் மற்றும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கருணநாதன் இளங்குமரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண பிரதம செயலாளர் திருமதி. தனுஜா முருகேசன், யாழ். பல்கலைக் கழக முன்னாள் சிரேஷ்ட விரிவுரையாளர் சத்தியமூர்த்தி கபிலன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ பீட சந்தைப்படுத்தல் துறைத் தலைவர் பேராசிரியர் திருமதி சிவானி சண்முகதாஸ், வடக்கு பிரதி அஞ்சல் மா அதிபர் நாயகம் திருமதி. நிவேதிகா கேதீசன் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (8)

# உடுவிலில் ஐஸ் போதையுடன் இளைஞர் ஒருவர் கைது

(அராலி)

சுன்னாகம் பொலிஸ் பிரிவிக்குட்பட்ட உடுவில் பகுதியில் ஐஸ் போதைப்பொருளுடன் 23 வயதுடைய இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது அவரிடமிருந்து 5 கிராம் 120 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் மீட்கப்பட்டது.

யாழ் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், சுன்னாகம் பொலிஸாரால் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (8-104)

# சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார மத்திய நிலையம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | வவுனியா |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 1000 | 800 | 800 | 900-1150 | 650 |
| உருளைக்கிழங்கு | 200 | 220 | 200 | -- | 250 |
| பச்சைமிளகாய் | 1300 | 1300 | 1200 | 1300-1700 | 875 |
| தக்காளி | 600 | 700 | 600 | 700 | 600 |
| மரவள்ளிக்கிழங்கு | 300 | 200 | 200 | 130-160 | 100 |
| கோவா | 350 | 300 | 300 | 300 | 300 |
| கரட் | 400 | 330 | 300 | 350 | 270 |
| பூசணி | 120 | 140 | 100 | 120 | 80 |
| புடோல் | 400 | 500 | 300 | 600 | 350 |
| வாழைக்காய் | 100 | 80 | 100 | 70-120 | 120 |
| சின்ன வெங்காயம் | 300 | 250-300 | 300 | 200-350 | 350 |
| பெரிய வெங்காயம் | 250 | 220 | 250 | -- | 230 |
| பாகற்காய் | 1500 | 1600 | 1500 | 1400 | 900 |
| வெண்டக்காய் | 400 | 250 | 300 | 250-350 | 300 |
| கருணைக்கிழங்கு | 350 | 260 | 300 | 200 | 300 |
| பயற்றங்காய் | 1200 | 1000 | 600 | 800-1000 | -- |
| லீக்ஸ் | 400 | 300 | 250 | 350 | 260 |
| பீற்றூட் | 350 | 600 | 500 | 500 | 300 |
| கறிமிளகாய் | 1200 | 1000 | 1200 | 1000 | 900 |
| முருங்கைக்காய் | 1600 | -- | 2000 | 2000 | -- |
| போஞ்சி | 800 | 800 | 1000 | 700 | 700 |
| கத்தரிதம்புள்ள | 800 | 700 | 500 | -- | -- |
| கீரை - 1 பிடி | 150 | 200 | 200 | 180 | 160 |
| தேசிக்காய் | 600 | 800 | 400 | 300-700 | 220 |
| தேங்காய் (ஒன்று) | 160 | 200 | 150 | 70-170 | 120 |
| இராசவள்ளி | 800 | 800 | 600 | 480 | 475 |
| வெங்காயப்பூ | 600 | 1200 | 600 | 800 | -- |
| முள்ளங்கி | 350 | 250 | 200 | 120 | 180 |
| பொன்னாங்காணி | 100 | 140 | 200 | -- | 70 |
| வல்லாரை | 60 | 80 | 100 | -- | 100 |
| [illegible] | 150 | 150 | 100 | 50-80 | 50 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலணை பிரதேச சபை
### மீள்சுழற்சிக்குரிய திண்மக் கழிவு
### விற்பனைக்கான பகிரங்க அறிவித்தல்-2025

எமது சபையினால் கழிவகற்றல் முறைமையின் கீழ் சேகரிக்கப்பட்டு தரம் பிரிக்கப்பட்ட பிளாஸ்ரிக், பொலித்தீன், கண்ணாடிக் கழிவுகள் மற்றும் கடதாசி/ மட்டை விற்பனை செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதனை பெற்றுக்கொள்ள ஆர்வமுள்ளவர்கள் கோரிக்கைக் கடிதத்துடன் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தே.அ. அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு, செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடன் 26.12.2025 ஆம் திகதிக்கு முன்னர் வேலணை பிரதேச சபையின் தலைமை அலுவலகத்திற்கு மு.ப 09 மணியிலிருந்து பி.ப 03 மணி வரையிலான நேரத்தில் சமூகமளித்து கேள்விப் பத்திரத்தினைப் பெற்றுக்கொள்ள முடியும்.

கேள்விப்பத்திரம் திறக்கும் இடம் :- வேலணை பிரதேச சபை, தலைமை அலுவலகம்
கேள்விப்பத்திரம் திறக்கும் திகதி :-29.12.2025 ஆம் திகதி திங்கட்கிழமை பி.ப 2.00 மணிக்கு

**சிவலிங்கம் அசோக்குமார்,** **தொலைபேசி இல : 021 221 0180**
**தவிசாளர்,**
**வேலணை பிரதேச சபை.** (C-4645) **23.12.2025**

# சீனாவின் உயர்மட்டத் தலைவர் இன்று இலங்கை விஜயம்



(கொழும்பு)

சீனாவின் தேசிய மக்கள் காங்கிரஸ் நிலைக் குழுத்தலைவர் ஜாவோ லெஜி இன்று கொழும்புக்கு வருகை தரவுள்ளார்.

சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங், பிரதமர் லி கியாங்குக்குப் பின்னர், சீன அரசாங்கத்தில் மூன்றாவது மிக உயர்ந்த பதவியில் உள்ள ஜாவோ லெஜியின் இந்தப் பயணம் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது.

மேலும் ஜாவோ லெஜி இரண்டு நாட்கள் இலங்கையில் தங்கியிருந்து, பேரிடருக்குப் பின்னரான உடனடித் தேவைகள் மற்றும் எதிர்கால சீன உதவி, இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது குறித்து இலங்கை அரசாங்க தரப்புகளுடன் அவர் கலந்துரையாடுவார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

## யாழ்.மாவட்ட கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசம் (வ.து)
## கேள்விப்பத்திரம் கோரல்

**கடைத்தொகுதி வாடகைக்கு விடுதல், நிலம் குத்தகைக்கு வழங்குதல்.**

எமது சமாச வளாகத்தின் உட்பகுதியில் அமைந்துள்ள அரை நிரந்தர கட்டிடக் கடைத்தொகுதிகளை வாடகைக்கு வழங்குவதற்கும் இக்கடைத்தொகுதிகளுக்கு அருகாமையிலுள்ள நிலத்துண்டுகளை குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கும் கேள்விப்பத்திரம் கோரப்படுகின்றது.

கேள்விப்பத்திரங்களை சமர்ப்பிக்க விரும்புவோர் அலுவலக நேரத்தில் சமாச பொதுமுகாமையாளருடன் தொடர்பு கொண்டு கடைத்தொகுதிகளை பார்வையிடலாம். அலுவலக நேரத்தில் மாதிரி விண்ணப்பப்படிவத்தினை பெற்று பூர்த்திசெய்து கடித உறையின் இடதுபக்க மேற்பக்கத்தில் "கடைத்தொகுதிக்கான கேள்விப்பத்திரம்" எனக் குறிப்பிட்டு பதிவுத்தபாலில் 07.01.2026 ஆம் திகதிக்கு முன் தலைவர், யாழ் மாவட்ட கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசம், இல. 95, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளல் நிராகரித்தல் தொடர்பில் சமாசத்தின் பணிப்பாளர் சபையின் முடிவே இறுதியானதாகும்.

**தலைவர்,**
**யாழ் மாவட்ட கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசம் (வ.து),**
**யாழ்ப்பாணம்.** (C-4646) **23.12.2025**

## முக்கிய அறிவித்தல்


அண்ணாமலையான் ஸ்ரீ ராகவேந்திரர் திருமண மண்டபத்தில் Manager ஆக பணியாற்றிய ரவீந்திரன் கோபிராஜ் என்பவர் 20.12.2025 உடன் சேவையை முடித்துக் கொண்டார். அவருடன் மண்டபம் சம்பந்தமான கொடுக்கல் வாங்கலில் ஈடுபட வேண்டாம் என்பதையும், எமது மண்டபத்திற்கும் அவருக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்பதையும் வாடிக்கையாளருக்கும் ஆதரவாளர்களுக்கும் அறியத் தருகின்றோம்.

நன்றி

**உரிமையாளர்,**
**அண்ணாமலையான் ஸ்ரீ ராகவேந்திரர் கலாசார திருமண மண்டபம்,**
**இல.542, கே.கே.எஸ்.வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**தொலைபேசி இலக்கம்:- 021 222 1355,**
**076 744 6064**
(6355)

## மரண அறிவித்தல்

தோற்றம் 15 - 06 - 1953



மறைவு 22 - 12 - 2025

## கனகரத்தினம் இராசரத்தினம்

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் நயினாதீவை வசிப்பிடமாகவும் இருபாலை வீதி, கோண்டாவில் கிழக்கை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட கனகரத்தினம் இராசரத்தினம் அவர்கள் நேற்று 22.12.2025 திங்கட்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகரத்தினம்-இராசம்மா தம்பதிகளின் மகனும், காலஞ்சென்றவர்களான கனகசபை-வடிவாம்பிகை தம்பதியினரின் அன்பு மருமகனும், சடாட்சரதேவியின் அன்புக் கணவரும், பூபாலசிங்கம், இராமநாதன், நடராசா, காலஞ்சென்ற சந்திரன் மற்றும் சுந்தரலிங்கம், துரைசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஹயனிகாந்தன், சுதர்சன், ஸாயினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிறிதரனின் பாசமிகு மாமனாரும், முத்துலிங்கதாஸ், சந்தனமலர், ஸ்ரீரங்கநாயகி, கனகாம்பிகை, மகேஸ்வரி மற்றும் காலஞ்சென்ற ரகுநாததாஸ் மற்றும் கமலாதேவி, இராஜஸ்ரீ, இராஜேஸ்வரி, கோகிலா, சுமதி ஆகியோரின் மைத்துனரும், திருமகட்செல்வி, காலஞ்சென்ற நாகேஸ்வரன், சிவனேஸ்வரன், பாக்கியநாதன் ஆகியோரின் சகலரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 23.12.2025 செவ்வாய்க் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**இருபாலை வீதி,** *தகவல்:*
**கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.** (C-4647) **குடும்பத்தினர்**


## உங்கள் இல்லங்களில் இருந்தவாறே வலம்புரியில் விளம்பரம் செய்யும் வாய்ப்பு

அன்பு வாசகர்களே!

**உங்கள் வீட்டில் இடம்பெறும் நிகழ்வுகள் மற்றும் வர்த்தக விளம்பரங்களை எவரது உதவியுமின்றி உங்கள் வலம்புரியில் நேரடியாகப் பிரசுரிக்க முடியும்.**

தொடர்புகளுக்கு :

தொலைபேசி:

**076 097 3127**

**021 221 7603**


**/ -076 636 3378**

E.mail: Valampurii@yahoo.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

## நாளை விண்ணில் பாய்கிறது; அமெரிக்க செயற்கைக்கோள்



(டில்லி)

அமெரிக்காவைச் சேர்ந்த ஏ.எஸ்.டி நிறுவனம். தகவல் தொடர்பு சேவைக்காக 6,500 கிலோ எடையில், புளூ பேர்ட் செயற்கைக்கோளை உருவாக்கி உள்ளது. இது தொலைதூர கிராமங்களுக்கு மொபைல் போன், அதிவேக இணையத்தள சேவைகளை வழங்க உதவும். இந்த செயற்கைக் கோளை இஸ்ரோ விண்ணில் செலுத்த உள்ளது.

ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரி கோட்டாவில் இஸ்ரோவின் சதீஷ் தவான் விண்வெளி ஆய்வுமைய ஏவுதளத்தில் இருந்து நாளை காலை 8:54 மணிக்கு LVM 3 ரொக்கெட் வாயிலாக புளூ பேர்ட் செயற்கைக்கோள் விண்ணில் நிலைநிறுத்தப்பட உள்ளது. இதற்கான அனைத்து ஏற்பாடுகளும் நடைபெற்று வருகின்றன.

இம்மாதம் 15 மற்றும் 21ஆம் திகதிகளில் புளூ பேர்ட் செயற்கைக்கோள் விண்ணில் செலுத்தப்பட இருந்த நிலையில், அத்திட்டம் ஒத்திவைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

இதுதொடர்பாக, இஸ்ரோ நிறுவனம் தனது சமூக வலைத்தளத்தில் வெளியிட்டுள்ள செய்தியில், இன்றைய கிட்டத்தட்ட ஆறு பில்லியன் மொபைல் சந்தாதாரர்கள் எதிர்கொள்ளும் டவர் பிரச்சினை நீக்குவதற்கும், பில்லியன் கணக்கானவர்களுக்கு பிராட்பேண்டைக் கொண்டுவருவதற்கும் நாங்கள் பணியில் ஈடுபட்டுள்ளோம் என தெரிவித்துள்ளது. (3)

## மூன்றாவது எண்ணெ
## பறிமுதல் செய்த அ

### தீவிரமடையும் ட்ரம்பி



**(வோஷிங்டன்)**
**அமெரிக்க ஜனாதிபதி டொனா**
**உத்தரவின்படி வெனிசுலாவின்**
**எண்ணெய்க் கப்பல் சிறை**
**டுள்ளதாக வெளி நாட்டு ஊடக**
**வெளியிட்டுள்ளன.**

அமெரிக்கா-வெனிசுலா இடையே மோதல் போக்கு நிலவி வருகிறது. வெனிசுலாவில் இருந்து அமெரிக்காவுக்கு போதை பொருட்கள் கடத்தப் படுவதாக அந்நாட்டு ஜனாதிபதி ட்ரம்ப் குற்றம் சாட்டி வருகிறார்.

இதையடுத்துப் போதை பொருள் கடத்துவதாக கரீபியன் கடல் மற்றும் கிழக்கு பசுபிக் பெருங்கடலில் வெனிசுலா படகுகள் மீது அமெரிக்க இராணுவம் தாக்குதல்களை நடத்தி வருகிறது. வெனிசுலாவைச் சுற்றி கடலில் அமெரிக்கா தனது படைகளைக் குவித்து உள்ளது.

இதற்கிடையே, வெனிசுலா கடற்கரையில் ஒரு எண்ணெய் கப்பலை அமெரிக்க இராணுவம் கடந்த வாரம் கைப்பற்றியது.

அமெரிக்காவின் யு.எஸ்.எஸ் ஜெரால்ட் ஆர் போர்ட் என்ற விமானம் தாங்கிக் கப்பலில் இருந்து ஹெலிகொப்டர் மூலம்

## கடலுக்கு அடியில் தங்கப்புதையல் ஆசியாவையே அதிர வைத்த சீனா!



(பீஜிங்)

கிழக்கு சீன கடல் பகுதியில், ஆசியாவின் மிகப்பெரிய கடலுக்கடியிலான தங்கப் படிமத்தை சீனா கண்டுபிடித்துள்ளது.

உலகிலேயே அதிகளவு தங்கத்தை உற்பத்தி செய்யும் நாடாக சீனா உள்ள போதிலும் தங்க கையிருப்பில் ஆபிரிக்கா மற்றும் அவுஸ்திரேலியாவுக்கு அடுத்த இடத்தில் உள் ளது.

2021 இல் இருந்து தங்கப் படிமங்களைக் கண்டுபிடிப்பதில் சீனா தீவிரம் காட்டி வருகிறது.

அதன்படி, வடகிழக்கு மாகாணமான லியானிங்கில், 14.44 இலட்சம் கிலோ தங்க இருப்பு கடந்தாண்டு கண்டுபிடிக்கப்பட்டது.

இதைத் தவிர, ஜின்ஜியாங் உய்குர் பிராந்தியத்தில் உள்ள மலையில், 10 இலட்சம் கிலோ தங்க இருப்பு கண்டுபிடிக்கப்பட்டது. இந்நிலையில், ஷான்டாங் மாகாணத்தின் யாண்டாய் நகரில் உள்ள லைஜோ கடற்கரைக்கு அப்பால், கடலுக்கு அடியில் ஒரு பிரமாண்டமான தங்கப் படிமத்தை சீனா கண்டுபிடித்துள்ளது.

இது ஆசியாவின் கடலுக்கடியில் உள்ள மிகப்பெரிய தங்க இருப்பு எனக் கூறப்படுகிறது.


சமீபத்தில் கண்டறியப்பட்ட இந்த தங்க இருப்பின் வாயிலாக லைஜோவின் ஒட்டுமொத்த தங்க இருப்பு 39 இலட்சம் கிலோவுக்கும் அதிகமாக உயர்ந்துள்ளது.

இது சீனாவின் தேசிய தங்க இருப்பில் தோராயமாக 26 சதவீதமாகும்.

இந்த கண்டுபிடிப்பின் வாயிலாக லைஜோ பகுதி, சீனாவின் தங்க இருப்பு மற்றும் தங்க உற்பத்தி ஆகிய இரண்டிலும் முதலிடத்தைப் பிடித்துள்ளது என, வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள் ளன. (3)

## இந்தோனேசியாவில் பேரு

### *16 பேர் உயிரிழப்பு
### *பலர் படுகாயம்



(ஜகார்த்தா)

இந்தோனேசியாவின் முக்கிய தீவான ஜாவாவில் நேற்று அதிகாலை பயணிகள் பேருந்து ஒன்று விபத்துக்குள்ளானதில் 16 பேர் உயிரிழந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

34 பேருடன் பயணித்த குறித்த பேருந்து ஒரு சுங்கச் சாவடியில் வேகக்கட்டுப்பாட்டை இழந்து ஒரு கொங்கிறீட் தடுப்பு சுவருடன் மோதி,

பின்னர் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதாக தேடல் மற்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ணெய் கப்பலையும்

# மெரிக்க இராணுவம்

## ின் நடவடிக்கைகள்

..................

**னால்ட் ட்ரம்பின்
ன் மூன்றாவது
றப்பிடிக்கப்பட்
டகங்கள் செய்தி**

கடலோர காவல்படையினர் எண்ணெய்க் கப்பலுக்குள் சென்றனர். அதன்பின். அந்தக் கப்பலை கைப்பற்றி தங்கள் கட்டுப்பாட்டுக்கு கொண்டு வந்தனர். இந்த எண்ணெய்க் கப்பல் வெளிநாட்டு பயங்கரவாத அமைப்புகளை ஆதரிக்கும் வகையில் சட்டவிரோதமாக செயற்பட்டதால் தடை செய்யப்பட்டுள்ளது என அமெரிக்கா தெரிவித்தது. கப்பல் கைப்பற்றப் பட்டதற்கு வெனிசுலா அரசு கடும் கண்டனம் தெரிவித்து உள்ளது.

இந்நிலையில், வெனிசுலாவுக்கு அருகிலுள்ள சர்வதேச கடல் பகுதியில் அமெரிக்கக் கடலோரக் காவல்படையால் மீண்டும் ஒரு எண்ணெய் கப்பல் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியது.

இரண்டு வாரங்களுக்கு பறிமுதல் செய்யப்படும் மூன்றாவது எண்ணெய்க்கப்பல் இதுவாகும். (3)



# விண்வெளிக்குச் சென்ற

## முதல் மாற்றுத்திறனாளி பெண்



விண்வெளிக்கு முதல் முறையாக மாற்றுத் திறனாளி பெண் ஒருவர் சென்று சாதனை படைத்துள்ளார்.

ஆராய்ச்சிகளுக்காக மனிதர்கள் விண்வெளிக்கு சென்று வந்த நிலையில், தற்போது சுற்றுலாவிற்காகவும் விண்வெளிக்கு சென்று வருகின்றனர்.

இந்தநிலையில், அமேசான் நிறுவனர் ஜெப் பெஸாஸ்க்கு சொந்தமான ப்ளூ ஆர்ஜின் விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம், மனிதர்களை விண்வெளி சுற்றுலா அழைத்துச் சென்று வருகிறது.

இந்தப் பயணத்தில் முதல் முறையாக மாற்றுத்திறனாளி பெண் ஒருவர் விண் வெளிக்கு சென்று சாதனை படைத்துள்ளார்.

விண்வெளிக்கு புறப்பட்ட ப்ளூ ஆரிஜின் விண்கலத்தில், ஜேர்மனியைச் சேர்ந்த ஐரோப்பிய விண் வெளி நிறுவனத்தின் (ESA) பொறியாளரான மைக்கேலா பென்தாஸ் பயணம் செய்தார்.

கடந்த சனிக்கிழமை பயணத்தில், ப்ளூ ஆரிஜின் விண்கலம் சுமார் 100 கிலோமீற்றர் உயரத்தை தாண்டி, கார்மன் கோடு என்று அழைக்கப்படும் விண்வெளியின் எல்லைக்கு சற்று மேலே சென்றது.

பயணத்தின் ஒரு பகுதியாக பயணிகள் சிறிது நேரம் எடையற்ற தன்மையை அனுபவித்தனர். இதன் மூலம், விண்வெளிக்கு சென்ற முதல் மாற்றுத் திறனாளி பெண் என்ற பெருமையை மைக்கேலா பென்தாஸ் பெற்றுள்ளார். (3)

# ந்து விபத்து

றும் மீட்புக் குழுவின் தலைவர் புடியோனோ கூறியுள்ளார்.

தலைநகர் ஜகார்த்தாவிலிருந்து நாட்டின் பண்டைய அரச நகரமான யோக கர்த்தாவுக்குச் சென்று கொண்டிருந்த பேருந்து, மத்திய ஜாவாவின் செமராங் நகரில் உள்ள கிராப் யாக் சுங்கச் சாவடியின் வளைந்த வெளியேறும் பாதையில் நுழையும் போது கவிழ்ந்து விபத்துக்குள்ளானது என்றும் அவர் கூறினார்.

விபத்து நடந்த சுமார் 40 நிமிடங்களுக்குப் பின்னர் காவல்துறை மற்றும் மீட்புக் குழுக்கள் சம்பவ இடத்திற்கு வந்து உயிரிழந்த ஆறு பயணிகளின் உடல்களை மீட்டனர்.

மேலும் 10 பேர் வைத்திய சாலைக்கு கொண்டு செல்லும்போது வழியிலும், சிசிக்கைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதும் உயிரிழந்தனர்.

சிகிக்சைக்காக வைத்திய சாலைகளில் அனுமதிக்கப்பட்ட ஏனைய18 பேரில் ஐந்து பேர் ஆபத்தான நிலையில் உள்ளதாகவும் புடியோனோ கூறினார். (3)



## இலங்கைக்கான தூதுவர் உட்பட

# 29 இராஜதந்திரிகளை

## திரும்ப அழைக்கும் அமெரிக்கா!

(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தனது "அமெரிக்கா ஃபர்ஸ்ட்" கொள்கையை உலகளவில் முன்னெடுப்பதற்காக, இலங்கைக்கான தூதுவர் உட்பட பல்வேறு நாடுகளில் பணியாற்றும் 29 தொழில்முறை தூதர்களை அதிரடியாகத் திரும்ப அழைத்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஆபிரிக்கா, ஆசியா மற்றும் ஐரோப்பா ஆகிய கண்டங்களில் உள்ள முக்கிய நாடுகளின் தூதரக அதிகாரிகளை மாற்றியமைப்பதன் மூலம், தனது நிர்வாகத்திற்கு முழு ஒத்துழைப்பு வழங்கும் நபர்களை அந்தப் பதவிகளில் அமர்த்த அவர் திட்டமிட்டுள்ளார்.

[illegible] தூதரக தலைவர்களுக்கு அவர்களின் பதவிக்காலம் ஜனவரி மாதத்துடன் முடிவடையும் என்று கடந்த வாரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மாற்றமானது வெளிநாடுகளுடனான அமெரிக்காவின் இராஜ தந்திர உறவுகளை மறுசீரமைக்கும் ஒரு முயற்சியாகப் பார்க்கப்படுகிறது.

இவ்வாறு ஒரே நேரத்தில் பல தூதர்கள் நீக்கப்படுவது வழக்கமான நடைமுறை என்று அரசாங்கம் கூறினாலும், இது அதிகாரிகளிடையே பெரும் பரபரப்பையும் கவலையையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்த அதிரடி மாற்றத்தால் தூதர்கள் தங்களது வெளிநாட்டுச் சேவை வேலைகளை இழக்க மாட்டார்கள் என்றும், அவர்கள் விரும்பினால் மற்றப் பணிகளைப் பொறுப்பேற்கலாம் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர். அமெரிக்க வெளியுறவுத்துறையில் ஏற்பட்டுள்ள இந்த அதிகார மாற்றம், ட்ரம்ப்பின் இரண்டாம் பதவிக்காலத்தின் தீவிரமான வெளியுறவுக் கொள்கையைப் பிரதிபலிப்பதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை மீண்டெழும் அமைச்சர் சமந்த நம்பிக்கை



(கொழும்பு)

உலகப் போரின் போது ஜப்பான் மீது அணுகுண்டு வீசப்பட்டது. முற்றாக அழிந்த அந்த நாடு மீண்டெழுந்தது. அவ்வாறான அணுகு முறையை நாமும் பின்பற்ற வேண்டும் என அமைச்சர் சமந்த வித்யாரத்ன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில், "பேரிடரால் பாதிக்கப்பட்ட இலங்கைக்கு உதவிகளை வழங்கிய உலக நாடுகளுக்கு நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

மீட்பு பணி, மருத்துவ சேவை, விநியோகம் என சகல வழிகளிலும் உதவிகள் கிடைக்கப் பெற்றன.

அடுத்த கட்டமாக மீள் கட்டுமானப் பணிகளைச் செய்ய வேண்டியுள்ளது. இதற்கான உதவிகளும் கிடைக்கப் பெறும் என்ற நம்பிக்கை உள்ளது.

சுனாமி காலத்தில் இருந்த அரசாங்கம் போன்றது அல்ல தற்போதைய அரசாங்கம். சர்வதேச நாடுகளுக்கு முழு நம்பிக்கை உள்ளது. அதனால்தான் உதவிகள் கிடைக்கப் பெறுகின்றன.

வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களும் நாட்டுக்காக உதவிகளை வழங்கி வருகின்றனர். உதவிகள் முறையாக முகாமைத்துவம் செய்யப்படுகின்றன.

ஜப்பானில் அணுகுண்டு வீசப்பட்ட பின்னர் அந்த நாடு மீண்டெழுந்தது. மக்கள் ஒன்றிணைந்து செயற்பட்டனர். நாமும் அவ்வாறு செயற்பட வேண்டும். எதிரணிகளும் ஒத்துழைக்க வேண்டும். இலங்கை நிச்சயம் மீண்டெழும் என்ற நம்பிக்கை உள்ளது" என்றும் குறிப்பிட்டுள்ளார். (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு:1985- இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 8இல் செவ்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: A/L,நகை வேலை<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/16349 | பிறப்பு-1994-இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி-பா-18 1/2<br>உயரம் : 5'2"<br>தகைமை/தொழில்: HNDE,TO<br>எதிர்பார்ப்பு: அரச,தனியார் உத்தியோகம்<br>தொ.இ: G/16388 |
| பிறப்பு:1987-இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>உயரம் :5'6"<br>தகைமை/தொழில்-O/L,Driver<br>எதிர்பார்ப்பு:தகுதியான பெண்<br>தொ.இ: B/16350 | பிறப்பு-1995-இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 2இல் செவ்<br>கி-பா- 59<br>உயரம் : 5'4"<br>தகைமை/தொழில்: BSc.Demo<br>எதிர்பார்ப்பு: உயர் பதவிகள்<br>தொ.இ: G/16390 |
| பிறப்பு:1990-இந்து<br>நட்சத்திரம்:அனுசம்<br>கி-பா-17<br>உயரம் :5'6"<br>தகைமை/தொழில்: BSC,MSC,Costing Engineer(Australia)<br>எதிர்பார்ப்பு: உயர் பதவிகள்<br>தொ.இ: B/16351 | பிறப்பு-2000 -இந்து<br>நட்சத்திரம்: பரணி 9 இல் சூரி செவ்<br>உயரம் : 5'2"<br>தகைமை/தொழில்:Diploma,Dentel Nurse<br>எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்<br>தொ.இ: G/16392 |
| பிறப்பு: 1993- இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 1இல் செவ்<br>உயரம்:5'8"<br>தகைமை/தொழில்- ACCOUNTANT (Australia)<br>எதிர்பார்ப்பு: உயர்பதவிகள்<br>தொ.இ: B/16352 | பிறப்பு-1999-இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி 7இல் செவ்<br>உயரம் : 5'2"<br>தகைமை/தொழில்: Degree(3rd Year(Following)<br>எதிர்பார்ப்பு -பட்டதாரி /வெளிநாடு<br>தொ.இ: G/16393 |
| பிறப்பு: 1991- இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>உயரம்:5'7"<br>தகைமை/தொழில்: BBM,Business Development(Australia)<br>எதிர்பார்ப்பு: உயர்பதவிகள்<br>தொ.இ: B/16353 | பிறப்பு-2001-இந்து<br>நட்சத்திரம்: பூரம் 8இல் செவ்<br>உயரம் : 5'4"<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு:தகுதியான ஆண்/ விவாகரத்தானவர்கள்<br>தொ.இ: G/16396 |

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் 504



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## வாழ்வின் இயல்பு

கிரேக்க தேசத்தில் ஒரு ராஜா இருந்தார்.

ஒரு மாதிரியான ராஜா.

பிடிவாத குணம் பைத்தியக்காரத்தனம்.. இரண்டும் அவரிடம் உண்டு. அந்த மன்னரிடம் ஒரு அழகான கட்டில். தங்கத்தால் செய்தது அந்தக் கட்டில். விலை உயர்ந்த வைரம் எல்லாம் அதில் பதித்து வைத்திருந்தார்கள். அதிலே மரமே கிடையாது... எல்லாம் தங்கம்.. வைரம் வைடூரியம்.. அவ்வளவு விலை உயர்ந்த கட்டில் எங்கேயுமே கிடையாது... வேறு யாரிடமும் கிடையாது. அப்பேற்பட்ட அபூர்வமான கட்டில்.

அந்த ராஜா தனக்கு என்று சில கொள்கைகளை வைத்திருந்தார்.

அரண்மனைக்கு யாராவது முக்கியமான விருந்தினர்கள் வந்தால்... அவர்களை அந்தக் கட்டிலிலே படுக்க வைப்பார். ஆனால் ஒரு விடயம். வருகின்ற விருந்தினருடைய உயரம் அந்தக் கட்டில் நீளத்துக்குச் சரியா இருக்க வேண்டும். படுத்தா, கூட குறைச்சலா இருக்கக் கூடாது.

அப்படி ஒரு ஒழுங்கு முறையை அவர் எதிர்பார்க்கின்றவர். யாராவது ஒரு விருந்தினர் வந்தால். அன்றைக்கு இரவே அந்தக் கட்டிலிலே படுக்க அனுமதி கொடுப்பார். வருகிற ஆசாமி அந்தக் கட்டிலை விட நீளமா இருந்தார் என்று வைத்துக் கொள்ளுங்கள். கட்டிலுக்குத் தகுந்த மாதிரி காலை வெட்டி விடச் சொல்லுவார்...

ஏன் என்றால் அந்தக் கட்டில் விலை உயர்ந்தது. அதை மாற்ற முடியாது. அதனாலே கட்டிலுக்குத் தகுந்த மாதிரி ஆளை மாத்திவிடுவார். அங்கே கட்டில் தான் முக்கியம்.. மனிதன் முக்கியமில்லை! அப்படித்தான்... பல சமயங்களிலே நமக்கு வாழ்வு முக்கியமாகத் தெரிவதில்லை. சட்ட திட்டங்கள் தான் முக்கியமாகத் தெரிகிறது.

பொதுவாக ஒரு அளவை வைத்துத் தான் கட்டில் தயார் செய்ய முடியும்...

ஒரு சராசரி மனிதனின் அளவு அது. சராசரி என்பது ... உதாரணத்துக்கு... பத்து பேர் உயரத்தைக் கூட்டி பார்த்தாலே வகுத்து வரும் எண் கணக்கின் ஒரு கற்பனை வடிவம் அது. அந்த வகையில் தான் அந்தக் கட்டில் தயார் செய்யப்பட்டிருக்கு. ஆனால் சராசரி உயர முள்ள மனிதன் என்பது கணக்கிலே வேண்டும் என்றால் இருக்கலாம்... நடை முறையிலே இருக்க முடியாது. அது கணக்கிலே ஏற்பட்ட ஒரு கற்பனை அளவு. அந்தக் கற்பனை அளவுக்கு நூறு சதவீதம் "கரெக்டா" ஒரு விருந்தாளி வர வேண்டும் என்று எதிர்பார்க்கிறது... சரியா இருக்குமா?

அந்தக் கட்டிலை விட நீளம் குறைவாக அதாவது உயரம் குறைவாக ஒரு ஆசாமி வந்து விடுகிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்பவும் அந்த ராஜா சும்ம இருக்க மாட்டார். அதுக்கென்றே அரண்மனையிலே சில பலசாலிகளை வைத்திருக்கார். அவர்களை கூப்பிட்டுக் கொண்டு வருவார். வந்த விருந்தாளியைக் கையைக் காட்டி விடுவார்.

தலைப் பக்கம் நாலு பேர் - கால் பக்கம் நாலு பேர் அவரைப் பிடித்து.. பலங் கொண்ட மட்டும் இழுக்கச் சொல்லுவார். கட்டில் அளவுக்கு கரெக்டா பொருந்தும் அளவுக்கு நீட்டச் சொல்லுவார். உடம்பு என்ன கம்பியா. தட்டி நீட்டுவதற்கு?

வருகின்ற விருந்தினர் நல்ல முறையிலே படுத்து ஆனந்தப் பட வேண்டும் என்று தான் அந்த ராஜா நினைக்கிறார். ஆனால் கட்டிலுக்குத் தகுந்த மாதிரி அவர் நீளம் இருக்க வேண்டும் என்று நினைக்கிறதினாலே எவ்வளவு இடைஞ்சல்!"

இது அரசனின் தவறில்லை.. ஒழுங்கு முறையின் தவறு அப்படி என்கிறார் ஒரு பெரியவர் (ஓஷோ)

வாழ்க்கையை நெறிப்படுத்துவது என்பது வேறு! கட்டுப் படுத்துவது வேறு! ஒழுங்கு முறையைத் திணிக்கிறேன் என்று சொல்லிக் கொண்டு பலபேர் வாழ்வையே இழந்துவிடுகிறார்கள். வாழ்வின் இயல்பு ஆனந்தம்... மகிழ்ச்சி! அந்த மகிழ்வை அடைய வேண்டும் என்றால் திறந்த மனசோட செயற்பட வேண்டும். இது தெரியாததினாலே எங்களில் பல பேர் வாழ்க்கையின் முக்கியமான சில பகுதிகளை இழந்து விடுகிறோம்.

எங்களிலே சில பேர் வேறு மாதிரி...

ஒரு ஆஸ்பத்திரி... ஆப்ரேஷன் நடந்து முடிந்தது... அதுக்குப் பின்பு தான் நர்ஸ் அவசரமா ஓடி வந்து சொல்லினார்.. "டாக்டர்... இந்த பேஷன்டுக்கு காலிலே தான் கட்டி... ஆனா நீங்க மூளையிலே கட்டி என்று நினைத்து தலையிலே ஆப்ரேஷன் செய்து விட்டீர்கள்... மூளை அபரேஷன் செய்ய வேண்டிய நோயாளி 15 ஆம் நம்பர் கட்டிலில் இருக்கார்..!" அப்படி என்றார்.

டாக்டர் பார்த்தார்... பரவாயில்லை. அதனாலே என்ன.. கட்டிலை மாத்திட்டா போச்சு! இவரைக் கொண்டு போய் 15 ஆம் நம்பர் கட்டிலிலே போட்டுவிடு! சரியா போயிடும்!" என்றார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கனவு இல்லம் மெய்ப்பட (பகுதி 12)

## வீட்டு கட்டிடங்களில் சுவர் கட்டுமானம்;

## பொறியியல் உண்மை VS கட்டுமான தவறான நம்பிக்கைகள்




வீட்டு கட்டுமானத்தில் சுவர் அமைப்பு என்பது ஒரு கட்டிடத்தின் பாதுகாப்பு, நீடித்த தன்மை மற்றும் வசிப்பதற்கான தரத்தை நிர்ணயிக்கும் முக்கிய கூறாகும். வட மாகாணத்தில் குறிப்பாக ஒற்றை மாடி வீடுகளின் கட்டுமானத்தில், பாரம்பரியமாக சுமை தாங்கும் (Load Bearing) சுவர் முறைகள் அதிகமாக பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்த முறைகள் கட்டிடத்தின் கூரை மற்றும் பிற கூறுகளின் எடைகளை நேரடியாக சுவர்களின் மூலம் அடித்தளத்திற்கு மாற்றும் வகையில் வடிவமைக்கப்பட்டவை. சரியான வடிவமைப்பு மற்றும் கட்டுமானம் இருந்தால், இம்முறை ஒற்றை மாடி வீடுகளுக்கு மட்டுமே பொருத்தமானது. ஆனால், இன்றைய சூழலில் இரு மாடி மற்றும் பல மாடி வீடுகள் அதிகரித்து வரும் நிலையில் இத்தகைய பாரம்பரிய முறைகள் தொழில்நுட்பரீதியாக போதுமானதாக இல்லை.

நவீன வீட்டு கட்டுமானங்களில் பெரும்பாலும் கட்டிடங்கள் கம்பிகள் (Columns), தாங்கிகள் (Beams), தளங்கள் (Slabs) மற்றும் அடித்தளங்களைக் கொண்ட கட்டமைப்பு (Frame Structure) முறையில் வடிவமைக்கப்படுகின்றன.

இவ்வகை கட்டிடங்களில் கட்டமைப்பின் முழு சுமையும் கம்பிகள் மற்றும் தாங்கிகளின் மூலம் அடித்தளத்திற்கு மாற்றப்படுகிறது. சுவர்கள் இங்கு சுமை தாங்கும் கூறுகளாக அல்லாது, இடங்களைப் பிரிப்பதற்கும், தனியுரிமை மற்றும் சுற்றுச்சூழல் வசதிகளுக்குமான நிரப்புச் சுவர்களாக (Infill Walls) மட்டுமே செயற்படுகின்றன. இச்சுவர்கள் தங்களின் சொந்த எடையையும், தேவைப்பட்டால் குறைந்த அளவிலான பக்கவாட்டு அழுத்தங்களையும் மட்டுமே தாங்க வேண்டும். எனவே, இவ்வகை கட்டிடங்களில் சுவர் தடிமன் அதிகரிப்பது கட்டிடத்தின் கட்டமைப்பு வலிமையை உயர்த்தாது என்பது ஒரு அடிப்படை பொறியியல் உண்மையாகும்.

ஆயினும் "தடிமனான சுவர்கள் வீடு வலுவாக இருக்கும்" என்ற தவறான நம்பிக்கை இன்னும் பல இடங்களில் நிலவுகிறது. சில அனுபவமற்ற அல்லது தொழில்முறை ஒழுக்கம் இல்லாத கட்டுமானர்கள், இந்த நம்பிக்கையைப் பயன்படுத்தி, வாடிக்கையாளர்களை அதிக தடிமனான அல்லது சுமை தாங்கும் கற்கள் பயன்படுத்த வற்புறுத்துகின்றனர். இதன் மூலம் கற்கள், சிமெந்து, மணல் மற்றும் தொழிலாளர் செலவுகள் அதிகரித்து, தேவையற்ற செலவுகள் ஏற்படுகின்றன. தொழில்நுட்ப அறிவு இல்லாத வீட்டு உரிமையாளர்கள், அதிக பொருள் பயன்படுத்துவது பாதுகாப்பை உறுதி செய்யும் என நம்பி, இந்த வாதங்களை ஏற்றுக்கொள்கின்றனர்.

பொறியியல் பார்வையில், தேவையற்ற தடிமனான சுவர்கள் கட்டிடத்தின் மீது கூடுதல் நிலை எடையை (Dead Load) ஏற்படுத்துகின்றன. இதனால் கம்பிகள், தாங்கிகள் மற்றும் அடித்தளங்கள் அதிக சுமைகளை தாங்க வேண்டிய நிலை உருவாகி, மேலும் கொங்கிறீட் மற்றும் இரும்பு பயன்பாடு தேவைப்படுகிறது. இதன் விளைவாக, கட்டுமான செலவுகள் அதிகரிப்பதுடன், கட்டிடத்தின் செயல்திறன் குறையக்கூடும். குறிப்பாக நில அதிர்வு அல்லது மண்ணின் மாறுபாடு போன்ற சூழ்நிலைகளில், அதிக எடையுள்ள கட்டிடங்கள் அதிக அபாயத்திற்கு உள்ளாகலாம்.

சுவர் கட்டுமானத்தின் செயல்திறன் அதன் தடிமனில் அல்லாது, அதன் வடிவவியல் (Geometry) மற்றும் பணித்திறன் (Workmanship) மீது அதிகமாக சார்ந்துள்ளது. சுவர்கள் பொதுவாக குறைந்த வளைவு சக்தி (Low Moment Capacity) கொண்ட மெல்லிய கூறுகளாக இருப்பதால், அவற்றின் செங்குத்து நிலை, நேர்த்தியான வரிசை மற்றும் சரியான இடவமைப்பு மிக முக்கியமானவை. சுவர்கள் நேராக இல்லாமல் சாய்ந்தோ அல்லது தவறான வரிசையில் கட்டப்பட்டால், மையத்திலிருந்து விலகிய சுமைகள் (Eccentric Loads) உருவாகி, விரிசல்கள் மற்றும் தோல்வி ஏற்படும் அபாயம் அதிகரிக்கிறது.

கதவுகள் மற்றும் ஜன்னல்கள் போன்ற திறப்புகள் உள்ள பகுதிகளில் சுமை அழுத்தங்கள் அதிகமாக குவிகின்றன. குறிப்பாக கதவு மற்றும் ஜன்னல் மூலைகளில் அதிக இழுவிசை அழுத்தங்கள் உருவாகும் வாய்ப்பு உள்ளது. இத்தகைய இடங்களில் விரிசல்கள் தோன்றுவதற்கான காரணம் சுவர் பலவீனம் அல்ல, மாறாக சரியான லிண்டல் கம்பிகள், இரும்பு இணைப்புகள் மற்றும் பொறியியல் விவரக்குறிப்புகள் இல்லாமையே ஆகும். சுவர் தடிமன் அதிகரிப்பதன் மூலம் இப்பிரச்சினைகளை தீர்க்க முடியாது. சரியான வடிவமைப்பு மற்றும் தொழில்நுட்ப விவரங்கள் மட்டுமே இதனை கட்டுப்படுத்த முடியும்.

சுவர் கட்டுமானத்தில் உயர்தர பணித்திறன் மற்றும் தொழில்நுட்ப மேற்பார்வை மிக முக்கியமான பங்கு வகிக்கின்றன. சரியான சிமெந்து-மணல் விகிதம், போதுமான க்யூரிங், அனுபவமுள்ள கைத்தொழிலாளர்கள் மற்றும் தொடர்ச்சியான மேற்பார்வை ஆகியவை சுவரின் நீடித்த தன்மையை உறுதி செய்கின்றன. ஒரு தகுதியான பொறியியலாளர், சுவர்களின் சரியான தடிமன், பொருள் தேர்வு மற்றும் கட்டமைப்புடன் அவற்றின் இணக்கம் ஆகியவற்றை உறுதி செய்வதன் மூலம், பாதுகாப்பான மற்றும் செலவுச் சுருக்கமான கட்டுமானத்தை உருவாக்குகிறார்.

பலரும் சுவர் எடையை குறைப்பது பாதுகாப்பை குறைக்கும் என தவறாக கருதுகின்றனர். உண்மையில், பொறியியல் வடிவமைப்பின் நோக்கம் தேவையற்ற நிலை எடைகளை குறைத்து, கட்டிடத்தின் செயல்திறனை மேம்படுத்துவதாகும். இலகுவான சுவர்கள் அடித்தளங்கள் மற்றும் கட்டமைப்பு கூறுகளின் மீது வரும் சுமைகளை குறைத்து, மொத்த கட்டிடத்தின் செயற்பாட்டை மேம்படுத்துகின்றன. பாரம்பரிய நம்பிக்கைகளை பின்பற்றுவதற்குப் பதிலாக, தொழில்நுட்ப அடிப்படையிலான முடிவுகள் சிறந்த விளைவுகளை தருகின்றன.

முடிவாக ஒரு வீடு வலுவாக இருக்க வேண்டுமெனில், அது தடிமனான சுவர்களால் அல்ல, சரியான கட்டமைப்பு, வடிவமைப்பு, நுணுக்கமான விவரங்கள், உயர்தர பணித்திறன் மற்றும் தொழில்முறை பொறியியல் வழிகாட்டுதலால் உருவாக வேண்டும். தேவையற்ற செலவுகளை தவிர்த்து, பாதுகாப்பான, வசதியான மற்றும் பொருளாதாரமான வீட்டை உருவாக்க வீட்டு உரிமையாளர்கள் தகுதியான பொறியியலாளர்களை அணுகுவது அவசியமாகும். பாரம்பரிய தவறான நம்பிக்கைகளை விடுத்து, அறிவார்ந்த பொறியியல் தீர்வுகளை நம்புவது தான் நீடித்த மற்றும் மதிப்புமிக்க வீட்டின் அடையாளமாகும்

**இலங்கை பொறியியலாளர்கள் சங்கம்,**
**வடக்கின் அத்தியாயம்.**

# இராசிபலன்

23.12.2025
மார்கழி 08, செவ்வாய்க்கிழமை
திருதியை முற்பகல் 11.26 மணிவரை

திருவோணம் பின்னிரவு 6.19 மணிவரை
சுப நேரம் 10.55-12.25 மணிவரை
இராகுகாலம் 3.25-4.55 மணிவரை

சதுர்த்தி விரதம்
சந்திராஷ்டமம்: புனர்பூசம்

வளவன்

**மேஷம்** – பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பால் முன்னேற்றம் காணும் நாள், செய்தொழில் மேன்மையுண்டு, தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள்.

**கடகம்** – கல்யானக் கனவுகள் நனவாகலாம், தொழிலில் அதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள், நீண்ட நாளைய நண்பர் ஒருவரின் சந்திப்பு இடம்பெறலாம்.

**துலாம்** – செய்தொழில் மேன்மையுண்டு, காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், செல்வாக்கு அதிகரிக்கும் நாள், பயணங்களால் பலனுண்டு.

**மகரம்** – பாராட்டு புகழும் கூடும் நாள், ஆற்றல்மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு, தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.

**ரிஷபம்** – தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், வம்பு வழக்குகள் தீர்ந்து வளம் காணும் நாள், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு.

**சிம்மம்** – எதிரியாக இருந்தவர்கள் மனம் மாறுவர், சிக்கனத்தைக் கடைப்பிடிக்கும் எண்ணம் உருவாகும், சுப காரியங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**விருச்சிகம்** – புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், பயணங்களால் பலனுண்டு, வளர்ச்சி கூடும் நாள்.

**கும்பம்** – சாப்பிடக் கூட நேரமில்லாமல் வேலைகளைச் செய்வீர்கள், வெளியூர் பயணங்களால் அலைச்சல்கள் அதிகரிக்கும், வழிபாட்டால் ஏற்றம் காண வேண்டிய நாள்.

**மிதுனம்** – மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், விரயங்கள் மேலோங்கும் நாள், கூட்டாளிகளை அனுசரித்துச் செல்வது நல்லது.

**கன்னி** – தொழிலில் முன்னேற்றமுண்டு, நீண்ட நாட்களாக தள்ளி போட்டு வந்த காரியமொன்றை இன்று செய்து முடிப்பீர்கள், மனநிறைவு கூடும் நாள்.

**தனுசு** – செய்தொழிலில் மேன்மையும் உயர்வும் கிட்டும், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், குடும்பத்தில் சுபநிகழ்வுகள் நடைபெறும் வாய்ப்புண்டு.

**மீனம்** – நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும்.

**பகிர்ந்து கொள்ளும் போது துன்பம் பாதியாகிறது, இன்பம் இரட்டிப்பாகிறது.**


noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 939





இந்த நிபந்தனையை நிறைவேற்றித் தர நீங்கள் ஒப்புக் கொள்வீர்களா?

இவ்விதம் கம்பீரமாக கேட்டுவிட்டுக் கரிகாலன் நிறுத்தினான். கிழவர்கள் இருவரும் திகைத்துப் போனார்கள். பழுவேட்டரையர் தடுமாற்றத்துடன், "இளவரசே! தங்களுடைய நிபந்தனையை ஒப்புக் கொள்ள நாங்கள் யார்? எங்களுக்கு என்ன உரிமை? சக்கரவர்த்தியை அல்லவா கேட்க வேண்டும்!" என்றார்.

கரிகாலன் கொதித்து எழுந்து, இடி முழக்கக் குரலில் கர்ஜனை செய்தான்: "பாட்டா! சக்கரவர்த்தியின் பெயரைச் சொல்லி யாரை ஏமாற்றலாம் என்று பார்க்கிறீர்கள்? என்னை ஏமாற்ற முடியாது! என் தந்தையை நீங்கள் அரண்மனையில் சிறைப்படுத்தி நீங்கள் ஆட்டி வைத்தபடி ஆடும் பொம்மையாக வைத்துக் கொண்டிருக்கிறீர்கள்! அது எனக்குத் தெரியாது என்றா எண்ணினீர்கள்? சின்னப் பழுவேட்டரையர் அனுமதியின்றி யாராவது என் தந்தையைப் பார்க்க முடியுமா? என் தம்பியை ஈழத்திலிருந்து சிறைப்படுத்திக் கொண்டு வருவதற்கு என் தந்தை கட்டளை போட்டது சக்கரவர்த்தியின் சொந்த விருப்பத்தினாலா? உங்கள் கட்டாயத்தினாலா? தேச மக்களின் கண்ணுக்குக் கண்ணான அருமை மகனை, வீராதி வீரனை, சிறைப்படுத்திக் கொண்டு வரும்படி எந்தத் தகப்பனாவது இஷ்டப்பட்டுக் கட்டளையிடுவானா? அருள்மொழியைச் சிறைப்படுத்திக் கொண்டு வந்து கடலில் மூழ்க அடித்துக் கொன்றுவிட்டதாக உங்கள் பேரில் இன்று சோழ நாட்டு மக்கள் எல்லாரும் ஆத்திரப்பட்டுக் கொதித்துக் கொண்டிருக்கிறார்கள்."

"இளவரசே! அத்தகைய அபாண்டமான பழியை யார் சொன்னது? சொன்னவனுடைய நாவைத் துண்டித்து அவனையும் கண்ட துண்டமாக்குவேன்!" என்று பழுவேட்டரையர் அலறினார்.


"பழி சொல்லுகிறவர் ஒருவராயிருந்தால் நீங்கள் கண்ட துண்டம் செய்யலாம். பதினாயிரம், லட்சம், பத்து லட்சம் பேர் சொல்லுகிறார்கள். அவ்வளவு பேரையும் நீங்கள் தண்டிப்பதாயிருந்தால் சோழ நாடு பிணக்காடாகவும் சுடுகாடாகவும் மாறிவிடும். சிவபக்தனாகிய மதுராந்தகன் ஆட்சி புரிவதற்குச் சோழ நாடு தகுந்த இராஜ்யமாயிருக்கும்! ஆனால் பாட்டா! அந்தப் பேச்சை நான் நம்பவில்லை மக்கள் அறிவற்ற மூடர்கள். ஆராய்ந்து பாராமல் ஒருவன் கட்டிவிட்ட கதையையே மற்றவர்களும் திரும்பிச் சொல்லிக் கொண்டிருப்பார்கள். சோழ குலத்துக்குப் பரம்பரைத் துணைவர்களான நீங்கள் அத்தகைய படுபாதகத்தை ஒரு நாளும் செய்திருக்க மாட்டீர்கள். அருள்மொழி கடலில் மூழ்கியிருந்தால் அது அவனுடைய தலைவிதியின் காரணமாகத்தான் இருக்க வேண்டும். 'மூன்று உலகமும் ஆளப் பிறந்தவன்' என்று கூறி வந்த ஜோதிடர்கள், ஆருடக்காரர்கள், ரேகை சாஸ்திரிகள் வாயில் மண்ணைப் போடுவதற்காகவே அவன் கடலில் மூழ்கி மாண்டிருக்க வேண்டும். பாட்டா! நீங்கள் எவ்வளவு பெரிய வீராதி வீரராயிருந்தாலும் நடுக்கடலில் சுழிக்காற்றை வரவழைப்பதற்கும் கப்பலின் பாய்மரத்தின் மீது இடிவிழச் செய்வதற்கும் உங்களால் கூட முடியாது.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## உண்மையான நண்பன்



ஒரு செல்வந்தர் வீட்டில் தெண்டன் என்பவன் காவலாளியாக வேலை பார்த்து வந்தான். தினமும் அவன் வீட்டுக்குத் திரும்பும் போது, மது அருந்தி வயிறு நிறையச் சாப்பிட்டு வருவான்.

அவன் மனைவி, "தினமும் இப்படிக் குடித்துவிட்டு, தின்று விட்டு வருகிறாயே? உன்னுடைய சம்பளம் இதற்கே போய் விட்டால், குடும்பத்தை எப்படி நடத்துவது?" என்று கடிந்து கொண்டாள்.

அதற்கு தெண்டன், "நான் வேலை செய்யும் வீட்டில், சிங்கன், வீரன் என இருவர் தோட்ட வேலை பார்க்கின்றனர். அவர்கள் இருவரும் என்னிடம் மிகுந்த பிரியம் உடையவர்கள். சிங்கன் எனக்கு மதுவும் உணவும் அளிப்பான். வீரனோ தன் உயிரையே கொடுக்கக் கூடியவன்." என்று கூறினான்.

சில நாட்களுக்குப் பிறகு, தெண்டனும் அவன் மனைவியும் சிங்கன் வீட்டுக்குச் சென்றனர். அவர்களை அவன் அன்போடு வரவேற்று, உபசரித்து, விருந்து அளித்து, அனுப்பி வைத்தான்.

அதன் பிறகு, வீரன் வீட்டுக்குச் சென்றனர். அப்போது வீரனும் அவன் மனைவியும் சூதாட்டத்தில் கவனமாக இருந்தனர். என்றாலும், சிறிது நேரம் அன்போடு பேசி, உணவு அளிக்காமல், அனுப்பி வைத்தனர். தெண்டன் மனைவிக்கு அவர்கள் உணவு அளிக்காதது வருத்தம் தந்தது.

"வீரன் உயிரையே கொடுக்கக் கூடியவன் என்று புகழ்ந்தாயே! என்று ஆத்திரப்பட்டாள் மனைவி. தெண்டன் அவளை சமாதானப்படுத்தினான்.

சில மாதங்களுக்குப் பின், தெண்டனும் மனைவியும் ஆலோசித்து நட்பைச் சோதிக்கத் தீர்மானித்தனர். தெண்டன் மனைவி மட்டும் சிங்கன் வீட்டுக்குச் சென்று, கவலை தோய்ந்த முகத்தோடு, "கணவனை, செல்வந்தர் வேலையிலிருந்து நீக்கி விட்டார்" என்று கூறினாள்.

"பணக்காரனை நாம் என்ன கேட்க முடியும்? ஏன் விலக்கினீர்கள் என்று கேட்க நமக்கு என்ன உரிமை இருக்கிறது? பணக்கார வர்க்கத்தாரிடம் வேலை செய்வது தலைக்கு மேல் கத்தி தொங்குவது போன்றது. வேறு வேலை தேடிக் கொள்ளச் சொல்லு" என்று அவளிடம் கூறி, அவளை அனுப்பி வைத்தான் சிங்கன்.

அடுத்து, வீரன் வீட்டுக்குச் சென்று தன் கணவனை வேலையிலிருந்து நீக்கி விட்டதாக சொன்னாள் தெண்டன் மனைவி.

வீரன் மிகவும் கவலைப்பட்டு, "முதலாளி மற்றும் அவர் மனைவியிடம் மிகவும் பணிவோடு வேண்டி அவனுக்கு வேலை மீண்டும் கிடைக்க முயற்சி எடுக்கிறேன், தைரியமாகப் போ, கவலை வேண்டாம்" என்று ஆறுதல் கூறி அனுப்பினான். அப்பொழுது தான் வீரனின் நட்பின் உயர்வை அறிந்து மகிழ்ந்தாள் தெண்டனின் மனைவி. உண்மையான நண்பன், ஆறுதல் கூறி ஆதரவு காட்டுவான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் மிகப்பெரிய அறிவாளி அல்ல, ஆனால் எனது சவால்களுடன் சற்று நீண்ட நேரம் போராடக்கூடிய வன். – ஆல்பேர்ட் ஐன்ஸ்டீன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தையிட்டி விகாரை விவகாரம் மிகுந்த வேதனை தருகிறது

யாழ்ப்பாணம் தையிட்டியில் உள்ள திஸ்ஸ ரஜ மகா விகாரைக்கு எதிராக நேற்று முன் தினம் (21) அகிம்சை வழியில் இடம்பெற்ற எதிர்ப்புப் போராட்டத்தின்போது நடந்த சம்பவங்கள் மிகுந்த வேதனை தருவதாக உள்ளன.

அதிலும் சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகளைக் கைது செய்யும் போது பொலிஸார் நடந்து கொண்ட விதம் மிகவும் வேதனைக்குரியது.

சைவ சமயத் துறவியை கோபாவேசத்துடன் பொலிஸார் அணுகுவது பண்பாடான செயலன்று.

அதேநேரம் ஒரு பௌத்த துறவியாக இருந்திருந்தால், பொலிஸார் அப்படி நடந்திருப்பார்களா? என்ற கேள்வியை இந்த இடத்தில் கேட்க வேண்டியுள்ளது.

ஆக, பௌத்த துறவிகள் எத்துணை அட்டகாசம் செய்தாலும் அதனைக் கைகட்டி அடக்கத்துடன் நின்று பார்க்கின்ற பொலிஸார்; வேலன் சுவாமிகள் மீது ஆத்திரம் கொண்டு அவரை மிக மோசமாக நடத்தியமையானது இந்த நாட்டில் பொலிஸாரிடம் இருக்கக்கூடிய இன – மத வேறுபாட்டினை வெளிக்காட்டுகிறது.

ஆக, பொலிஸாரிடமுள்ள இத்தகைய குரோதங்களை ஒழிக்காமல் எதுவும் செய்ய முடியாதென்பதும் இங்கு சுட்டிக்காட்டுதற்குரியது.

அதேநேரம், அகிம்சை வழியில் தமது எதிர்ப்பை வெளிப்படுத்திய வலி.கிழக்கு பிரதேச சபைத் தலைவர் தியாகராசா நிரோஷ் மற்றும் வலி.வடக்கு பிரதேச சபை உறுப்பினர்கள் மூவர் உள்ளிட்டோர் கைது செய்யப்பட்ட முறைமை இலங்கைப் பொலிஸார் இன்னமும் சிங்களப் பொலிஸாராக – சிங்கள இனத்துக்குரிய பொலிஸாராகவே இருக்கின்றனர் என்பதை மீண்டும் உறுதி செய்கிறது.

இஃது ஒருபுறம். மறுபுறத்தில் தவத்திரு வேலன் சுவாமிகள் தமது ஆதீன பீடத்தில் இருந்து கொண்டு; எம் இனத்துக்கும் சமயத்துக்குமான பணிகளைச் செய்வதுதான் உத்தமம் என்பது நம் தாழ்மையான கருத்து.

இல்லை களத்தில் இறங்கிப் போராடுவது என்றால், இந்து – கத்தோலிக்க மதகுருமார்களையும் இணைத்துக் கொண்டு அந்தப் போராட்டத்தைச் செய்ய வேண்டும்.

எனினும் தையிட்டி விகாரைக்கு ஏதோ சைவ சமயம் மட்டுமே எதிர்ப்பு என்பதுபோல நிலைமை உணரப்படுகிறது.

அதேநேரம், தையிட்டி விகாரைக்கு எதிராகப் போராட்டம் நடத்துகின்றவர்கள் நீதிமன்றங்களை நாடுவது பற்றிச் சிந்திக்க வேண்டும்.

இதைவிடுத்து, அவ்வப்போது தையிட்டி விகாரைக்கு எதிராகப் போராட்டம் நடத்துவதானது அவ்வளவு ஆரோக்கியமானதல்ல.

அவ்வாறு தொடர்ந்து போராட்டம் நடத்துவதானது எங்கள் தொடர்பில் சாதகமான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கும் தென்பகுதி மக்களிடம் அது தவறான கருத்துருவாக்கத்தை ஏற்படுத்திவிடும்.

தவிர, இத்தகைய போராட்டங்கள் மனித உயிர்களையும் காவு கொண்டும் விடலாம்.

ஆம், எத்தனையோ துன்ப துயரங்களைத் தாண்டி வந்த நம் இனம் இனியும் இழப்புகளைச் சந்திக்க முடியாது. ஆகையால் சம்பந்தப்பட்ட நம்மவர்களும் தையிட்டி விகாரை விடயத்தில் பொறுப்புடன் நடந்து கொள்வது மிகவும் அவசியம்.

யாழில் டிசம்பர் மாதம் மட்டும் ●●●●●●●●●●●●

# 48 வியாபார நிலையங்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது

## அரசாங்க அதிபர் ம.பிரதீபன்

(யாழ்ப்பாணம்)

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு யாழ்ப்பாண மாவட்ட பாவனையாளர் அதிகார சபையினர் மாவட்டம் முழுவதும் விசேட சுற்றி வளைப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாகவும் இம் மாதம் 22ஆம் திகதி வரையான காலப்பகுதியில் மட்டும் 48 வியாபார நிலையங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் ம.பிரதீபன் தெரிவித்துள்ளார்.

மேலும் காலாவதியான பொருட்களை விற்பனை செய்தமை, கட்டுப்பாட்டு விலையை விட அதிக விலைக்குப் பொருட்களை விற்பனை செய்தமை, விலை காட்சிப்படுத்தாமல் பொருட்களை விற்பனை செய்தமை, பொதிகளில் உள்ள சுட்டுத் துண்டுகளில் திரிவுகளையும் மாற்றங்களையும் செய்தமை, போலித் தயாரிப்புகள் மற்றும் எஸ். எல். எஸ் (SLS) குறியீடற்ற தரமற்ற பொருட்களை விற்பனை செய்தமை மின்சார மற்றும் இலத்திரனியல் சாதனங்களுக்கு உத்தரவாத சீட்டு (Warranty card) வழங்கப்படாமல் விற்பனை செய்தமை போன்ற பல்வேறு குற்றங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

இக்காலப் பகுதியில் எரிவாயுவுக்கு (GAS) போலியான தட்டுப்பாட்டை ஏற்படுத்துதல், பதுக்குதல் போன்ற செயற்பாடுகள் இடம் பெறுவதால் அது தொடர்பில் பொதுமக்கள் ஏதேனும் அசௌகரியங்கள் ஏற்படின் 021-221-9001 என்ற மாவட்ட பாவனையாளர் அதிகார சபைக்கு முறைப்பாட்டினை வழங்க முடியும் எனவும் அறிவித்துள்ளார்.

மேலும், தவறிழைக்கும் வியாபாரிகளுக்கு எதிராக தொடர்ந்தும் சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். அதேவேளை பொதுமக்களும் பாவனைக்காக பொருட்களை கொள்வனவு செய்யும்போது மிகவும் அவதானமாக செயற்படுமாறு அரசாங்க அதிபர் பொதுமக்களுக்கு அறிவுறுத்தினார்.

(ம-7,33,104)

# அனர்த்த நிவாரணங்களுக்கான திருத்தப்பட்ட சுற்று நிருபம் வெளியீடு

(கொழும்பு)

அனர்த்த நிவாரணங்களுக்கான திருத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் தொடர்பான சுற்றுநிருபம் வெளியிடப்பட்டுள்ளது.

"டித்வா" புயலினால் ஏற்பட்ட மண்சரிவு மற்றும் வெள்ளப்பெருக்கினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு முன்மொழியப்பட்ட நிவாரணங்கள் தொடர்பான விபரங்களை உள்ளடக்கிய புதிய சுற்றுநிருபம் ஒன்றை நிதி அமைச்சு வெளியிட்டுள்ளது.

நிவாரணத் திட்டத்தை, மேலும் வினைத்திறனாகவும் பயனுள்ள வகையிலும் நடைமுறைப்படுத்துவதற்காக புதிய உட்சேர்ப்புகள், தெளிவுபடுத்தல்கள் மற்றும் திருத்தங்களை உள்ளடக்கி இந்த சுற்றுநிருபம் வெளியிடப்பட்டுள்ளதாக நிதி அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (ம-7)

# புத்தூரில் விபத்து இளைஞன் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் புத்தூரில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் அதே பகுதியைச் சேர்ந்த உதைப்பந்தாட்ட வீரரான ஜெகநாதன் வினோஜன் (வயது - 25) என்ற இளைஞனே உயிரிழந்தவராவார்.

காரும் மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதியதில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது. (ம-7)

உரும்பிராய் தெற்கில்

# பத்திரிகை படிக்கச் சென்றவர் மயங்கி விழுந்து மரணம்

அயல் வீட்டிற்குப் பத்திரிகை படிக்கச் சென்ற வயோதிபர் மயங்கிவிழுந்து உயிரிழந்துள்ளார்.

இதில் செல்வாபுரம் உரும்பிராய் தெற்கைச் சேர்ந்த மூக்கன் கணேஸ் (வயது-84) என்பவரே உயிரிழந்தவராவார்.

நேற்றுத் திங்கட்கிழமை (22) அயல் வீட்டிற்குப் பத்திரிகை படிக்கச் சென்ற போது மயங்கி விழுந்து உயிரிழந்தார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி ஆறுமுகம் ஜெயபாலசிங்கம் விசாரணைகளை மேற்கொண்டு உடற்கூற்று பரிசோதனைக்கு அறிவுறுத்தினார். (ம-7,60)

# பாடசாலை விடுதியில் போதைப்பொருளுடன்

## ஆசிரியர் உட்பட மூவர் கைது

(மொனராகலை)

மொனராகலை - செவனகல பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றின் விடுதியில் வைத்து போதைப்பொருளுடன் விளையாட்டு ஆசிரியர் உட்பட மூவர் செவனகல பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

செவனகல பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பேரில் பாடசாலை விடுதியில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பிரதான சந்தேக நபரான விளையாட்டு ஆசிரியர் 28 வயதுடைய ஒரு [illegible] பொலிஸார் தெரிவித்தனர்.

ஏனைய சந்தேக நபர்கள் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டு வந்தவர்கள் எனவும் பொலிஸ் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

சந்தேக நபர்களிடமிருந்து ஐஸ் போதைப் பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

விளையாட்டு ஆசிரியர் தனது பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களுக்குப் போதைப்பொருளை விற்பனை செய்தாரா? என்பது தொடர்பில் செவனகல பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

# இலங்கையின் ஏற்றுமதி 5.8 சதவீத வளர்ச்சி

(கொழும்பு)

இலங்கையின் ஏற்றுமதித் துறையானது இந்த ஆண்டின் ஜனவரி முதல் நவம்பர் வரையிலான காலப்பகுதியில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியை எட்டியுள்ளது.

கடந்த ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் இது 5.8 சதவீத வருடாந்த வளர்ச்சியாகும் என ஏற்றுமதி அபிவிருத்தி சபை தெரிவித்துள்ளது.

இந்த 11 மாத காலப்பகுதியில் நாட்டின் மொத்த ஏற்றுமதி வருமானம் 15,776.36 மில்லியன் அமெரிக்க டொலர்களை எட்டியுள்ளது.

அதேவேளை நவம்பர் மாதத்தில் மட்டும் மொத்த ஏற்றுமதி வருமானம் 1,364.52 மில்லியன் அமெரிக்க டொலர்களாகப் பதிவாகியுள்ளது.

2024 ஆம் ஆண்டின் நவம்பர் மாதத்துடன் ஒப்பிடுகையில் இது 5.56 சதவீத வளர்ச்சியாகும் எனவும் தரவுகள் தெரிவிக்கின்றன. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாராளுமன்றத்தில் பெண்களின் அரசியல் 21

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம். தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

1977ஆம் ஆண்டு பொதுத் தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல் செய்த 756 பேரில் 14 பேர் பெண்களாவர். இது மொத்த வேட்பாளர்களில் 1.8 வீதமாகும். இந்த 14 பேரில் 11 பேர் மட்டுமே பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டனர். இது மொத்தமாக தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களில் 6.5 வீதமாகும். 1977 பாராளுமன்ற பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி சார்பில் 3 பெண்களும், சிறீலங்கா சுதந்திரக்கட்சி சார்பில் 4 பெண்களும், லங்கா சமசமாஜகட்சி சார்பில் 2 பெண்களும், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் 1 பெண்ணும், மக்கள் ஐக்கிய முன்னணி கட்சி சார்பில் 1 பெண்ணும், சுயேட்சையாக 2 பெண்களும் போட்டியிட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தேர்தலில் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா (சிறீலங்கா சுதந்திரக்கட்சி) அத்தனகல தொகுதியிலிருந்தும் ரேணுகா ஹேரத் (ஐக்கிய தேசிய கட்சி) வலப்பனை தொகுதியிலிருந்தும் விமலா கன்னங்கர (ஐக்கிய தேசிய கட்சி) கலிகமுவ தொகுதியிலிருந்தும், அமரா பியசீலி ரத்நாயக்கா (ஐக்கிய தேசிய கட்சி) வாரியபொல தொகுதியிலிருந்தும் தெரிவு செய்யப்பட்டனர். ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் அதிகளவு பெண்கள் தெரிவு செய்யப்பட்டது இந்தத் தேர்தலிலேயே.

1977இற்குப் பின் முதலாவது இடைத் தேர்தல் நவம்பர் 11ஆம் திகதி தெஹிவளை தேர்தல் தொகுதிக்கு நடந்தது. அத்தொகுதி எம்.பி.யான எஸ்.டி.எஸ். ஜயசிங்கவின் மரணத்தைத் தொடர்ந்து நடந்த அவ்விடைத் தேர்தலில் எஸ்.பி.எஸ். ஜயசிங்கவின் புதல்வி சுனேத்திரா ரணசிங்க ஐ.தே.க, சார்பில் போட்டியிட்டு 10.484 மேலதிக வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டார்.

அது வரைகாலம் நடைமுறையில் இருந்த வெற்றிடமாகிற ஆசனங்களில் இடைத்தேர்தல் நடத்தி நிரப்பிவிடும் முறை புதிய அரசியலமைப்பின் மூலம் மாற்றியமைக்கப்பட்டது. அதன்படி தொகுதி வெற்றிடத்திற்கு புதிய விகிதாசாரத் தேர்தல் முறையின்படி புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டனர். இதன் விளைவாக 1989ஆம் ஆண்டு பாராளுமன்றப் பொதுத் தேர்தல் நடத்தப்படும் போது புதிதாக ஏழு பெண்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டனர்.

1977 இல் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் போட்டியிட்டு தெரிவு செய்யப்பட்டிருந்த திரு. எம். கனகரத்னத்தின் மரணத்தைத் தொடர்ந்து அவருக்குப் பதிலாக அவரது சகோதரி ரங்கநாயகி பத்மநாதன் 1980 நவம்பர் 25ஆம் திகதி நியமிக்கப்பட்டார்.

கரந்தெனிய தொகுதி பாராளுமன்ற உறுப்பினராக இருந்த பந்துல ஹேவா சேனாதீரவின் மரணத்தைத் தொடர்ந்து வெற்றிடமான ஆசனத்திற்கு அவரது மனைவி சேபாலி சேனாதீரவை 1982 இல் மார்ச் 26ஆம் திகதி ஐ.தே.க நியமித்தது.

ஹேவாஹெட்ட ஆசனத்திற்கு தெரிவு செய்யப்பட்டிருந்த அனுர டேனியல் 1982 ஏப்ரல் 18ஆம் திகதி இராஜினாமா செய்து கொண்டதை அடுத்து அவரது சகோதரி திருமதி ரூபா சிறியானி டேனியல் ஐ.தே.க சார்பில் நியமிக்கப்பட்டார்.

ஹரிஸ்பத்துவ தொகுதி பாராளுமன்ற உறுப்பினர்? ஆர்.பி. விஜேசிறி 1984 ஒக்டோபர் மாதம் நடத்தப்பட்ட குண்டசாலை இடைத் தேர்தலில் ஐ.தே.க. சார்பில் போட்டியிடுவதற்காக இராஜினாமா செய்து கொண்டதை அடுத்து அவரது மனைவி திருமதி எல்.எம். விஜேசிறி (லோஹினி மஹேஸ்வரி ஈரியகம விஜயசிறி) நியமிக்கப்பட்டார். அவர் 1988 வரை உறுப்பினராக இருந்தார்.

1987ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 18ஆம் திகதி ஸ்ரீஜயவர்தனபுர பாராளுமன்ற கட்டிடத்தில் இடம் பெற்ற குண்டு வெடிப்பின் போது காயமுற்[illegible] தெனியாய [illegible] ளுமன்ற உறுப்பினர் கீர்த்திசேன அபேவிக்கரமவுக்குப் பதிலாக அவரது சகோதரி செல்வி. கீர்த்தி லதா பிரேமவதி அபேவிக்கிரம 1987 செப்ரெம்பர் மாதம் 1ஆம் திகதி நியமிக்கப்பட்டார்.

ரம்புக்கன தொகுதி பாராளுமன்ற உறுப்பினராகவும் சமூக சேவை அமைச்சராகவும் இருந்த அசோக்கா கருணாரத்தினவின் மரணத்தைத் தொடர்ந்து அவரது இடத்துக்கு அவரின் மகள் மஹாமாயா சமந்தா தேவி கருணாரத்தின நியமிக்கப்பட்டார். இவர் 1989 தேர்தலிலும் தெரிவு செய்யப்பட்டு சமூக புனர்வாழ்வு அமைச்சராகவும் கடமையாற்றியவர்.

இப்படியாக 1977 யூலை 21ஆம் திகதி ஆறு வருட ஆட்சிக்காக தெரிவு செய்யப்பட்ட 8 ஆவது பாராளுமன்றம் 1988 டிசம்பரில் கலைக்கப்படும் போது பல பெண்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாக அங்கம் வகிக்கக் காணப்பட்டனர்.

இதற்கிடையில் 1980 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் முன்னாள் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவின் குடியியல் உரிமை பறிக்கப்பட்டதைத் தொடர்ந்து பாராளுமன்ற உறுப்பினர் பதவியும் பறிபோனது. 8ஆவது பாராளுமன்றத்தில் ஸ்ரீ.ல.சு.க வை பிரதிநிதித்துவப்படுத்திய ஒரே பெண் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க மட்டுமே. அவரது உறுப்பினர் பதவியும் 1980 இல் பறிபோனதோடு 1989 வரை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப் பிரதிநிதித்து வப்படுத்தும் வேறு எந்தப் பெண்ணும் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கவில்லை. 8 ஆவது பாராளுமன்றத்தில் மொத்தம் 11 பெண்கள் அங்கம் வகித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. இதுவே அது வரை கால பெண் பிரதி நிதித்துவத்தில் கூடிய தொகையாகும்.

1978இல் ஆறில் ஐந்து பெரும்பான்மை பலத்தோடு ஆட்சியேறிய ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம், இரண்டாவது குடியரசு அரசியலமைப்பை நடைமுறைக்குக் கொண்டு வந்தது. அது வரை காலம் நடைமுறையில் இருந்த வெற்றிடமாகிற ஆசனங்களில் இடைத் தேர்தல் நடத்தி நிரப்பி விடும் முறை இவ் வரசியலமைப்பின் மூலம் மாற்றியமைக்கப்பட்டது. திரு. J.R.ஜெயவர்தன அவர்கள் இலங்கைப் பிரதமரானார். 1978இல் திரு. J.R.ஜெயவர்தன அவர்கள் இலங்கை ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றதன் பின்பு R. பிரேமதாச பிரதம அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

இலங்கை ஜனாநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் உறுப்புரை 66 (ஊ) இன் பிரகாரம், பாராளுமன்றத்தின் அனுமதியின்றி தொடர்ச்சியாக மூன்று மாதங்களுக்கு பாராளுமன்ற அமர்வுகளில் கலந்து கொள்ளாமையினால், அ. அமிர்தலிங்கம் அவர்கள் 83.10. 24 ஆம் திகதி தனது ஆசனத்தைத் துறந்தார். இவர் எப்போது தனது ஆசனத்தை துறந்தாரோ அப்போதிலிருந்து தனது எதிர் கட்சித் தலைவர் பதவியையும் இழந்தார். 1972 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் கீழ் நடத்தப்பட்ட ஒரேயொரு பொதுத் தேர்தல் இதுவேயாகும்

### ரேணுகா ஹேரத் (1977-2000, 2006-2010)

ரேணுகா ஹேரத் என்று பொதுவாக அறியப்படும் ரேணுகா மெனிகே ஹேரத், ஒரு முக்கிய இலங்கை அரசியல்வாதி. இவர் ஐக்கிய தேசிய கட்சி சார்பில் 1977 ஆம் ஆண்டு நுவரெலியா மாவட்டத்தில் உள்ள வலப்பனே தேர்தல் தொகுதியில் போட்டியிட்டு அரசியலுக்கு வந்தார். அவர் தனது முதல் தேர்தலில் வெற்றி பெற்று மாவட்ட அமைச்சரானார். அதன்பின் இரு கால இடைவெளியில் 1989-2000 மற்றும் 2006-2010 பாராளுமன்ற உறுப்பினராக இருந்தார். ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் கீழ் சுகாதார மற்றும் மகளிர் விவகார அமைச்சராக (1989-94) இருந்தார். அவர் சுகாதார அமைச்சராக இருந்த காலத்தில், சுகாதார அமைப்பில் மிகப் பெரிய அளவில் முன் னேற்றம் ஏற்பட்டு இருந்தது.

தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்தேவி...

ஈடுபடுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

அத்துடன் யாழ்தேவி ரயிலில் முதலாம் வகுப்பு (குளிரூட்டப்பட்ட) மற்றும் இரண்டாம் வகுப்பு ஆசனங்களை முற்பதிவு செய்வதற்கான வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. (ம-7)

## இன்று முதல்...

விடுமுறை வழங்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

நீண்ட விடுமுறைக்கு பின்னர் கடந்த 16ஆம் திகதி மூன்றாம் தவணையின் இரண்டாம் கட்டத்திற்காக திறக்கப்பட்ட பாடசாலைகளுக்கு இன்று முதல் எதிர்வரும் 28ஆம் திகதி வரை விடுமுறை வழங்கப்படவுள்ளது.

இந்த நிலையில் மூன்றாம் தவணையின் மூன்றாம் கட்டம் 29 ஆம் திகதி ஆரம்பமாகி 31ஆம் திகதி வரை இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## சேற்றில்...

துக்கொண்டிருந்த இளைஞன் சேற்றில் புதையுண்டு உயிரிழந்துள்ளார்.

ஆவரங்கால் பகுதியைச் சேர்ந்த கமலநாதன் சாருஜன் (வயது-25) என்ற இளைஞனே உயிரிழந்தவராவார்.

கடல்நீரேரியில் நேற்றுத் திங்கட்கிழமை மீன் பிடித்துக்கொண்டிருந்த இளைஞன் திடீரென சேற்றில் புதைந்து காணாமல் போயுள்ளார்.

அதனை அவதானித்தவர்கள் கடல்நீரேரியில் இறங்கி இளைஞனைத் தேடிய நிலையில் நீண்ட போராட்டத்தின் பின் இளைஞன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸாருக்குத் தெரிவிக்கப்பட்டதை அடுத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதுடன் சடலத்தை உடற்கூற்றுப் பரிசோதனைக்காக அச்சுவேலி வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர்.

மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ம-7,33,60)

## வேலன்...

ரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

நேற்று முன்தினம் மதியம் மல்லாகம் பதில் நீதிவான் முன்னிலையில் பலாலி பொலிஸாரால் முற்படுத்தப்பட்டிருந்தவேளை வேலன் சுவாமிகள் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு திடீரென சுகவீனம் ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து வேலன் சுவாமிகள் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-7,33)

## தையிட்டி தமிழ்...

புத் தெரிவித்தும் நேற்று யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர்களால் கவனயீர்ப்புப் போராட்டமொன்று இடம்பெற்றிருந்தது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பிரதான நுழைவாயில் முன்பாக குறித்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

யாழ்.பல்கலைக்கழகம் மாணவர் ஒன்றியத்தினர் இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்திருந்தனர்.

இதன்போது "தமிழர் தாயகம் எங்கள் சொத்து", "தையிட்டி தமிழர் சொத்து பௌத்த ஆக்கிரமிப்புகளை உடனே நிறுத்து" போன்ற கோசங்களும் எழுப்பப்பட்டது.

அதுமட்டுமன்றி யாழ்.பல்கலைக் கழகத்திற்குள் விகாரை அமைக்க முயற்சி செய்ததாகவும் அதனை பெரும் சிரமங்களுக்கு மத்தியில் தடுத்து நிறுத்தியதாகவும் தெரிவித்திருந்தனர்.

அத்துடன் தையிட்டியில் நேற்று முன்தினம் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் பொலிஸார் காட்டுமிராண்டித்தனமாகச் செயற்பட்டமைக்கும் அமைதிவழிப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களைக் கைது செய்யப்பட்டமைக்கும் மாணவர்கள் கடும் கண்டனமும் தெரிவித்தனர். (ம-7,33)

## விகாரைக்கு...

தாஸ உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் உரையாற்றிய தையிட்டி திஸ்ஸ ரஜமஹா விகாரையின் விகாராதிபதி கிந்தொட்ட நந்தாராம தேரர்,

திஸ்ஸ விகாரையை அடிப்படையாகக்கொண்டு இன்னும் ஓரிரு மாதங்களுக்குப் பின்னர் மீண்டும் பிரச்சினை தோற்றம் பெறாத வகையில் தீர்வு காண்பது மிகவும் சிறந்ததாக அமையும்.

சகல பிரச்சினைகளுக்கும் இரண்டு பக்கங்கள் இருக்கும். இந்தப் பிரச்சினைக்கும் இரு தரப்புப் பேச்சு வார்த்தை ஊடாகவே தீர்வு காண வேண்டும்.

விட்டுக்கொடுப்பு பௌத்த தர்மமாகும். விகாரைக்குத் தேவையான காணியை வைத்துக்கொண்டு மிகுதி காணியை தமிழ் மக்களுக்கு வழங்கி இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது சிறந்ததாக அமையும்.

திஸ்ஸ விகாரையை முன்னிலைப்படுத்தி தொடர்ச்சியான முரண்பாடுகள், பிரச்சினைகள் தோற்றம் பெறுவது முறையற்றது. இதற்கு உரிய தலைமைத்துவத்தின் ஊடாகப் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு முரண்பாடற்ற வகையில் தீர்வு காண வேண்டும் என்றார். (ம-7)

## டித்வா...

வரலாற்றில் மிகவும் அழிவுகரமான இந்தப் புயலினால் 25 மாவட்டங்களிலும் உள்ள சுமார் 2 மில்லியன் மக்களும் 5 இலட்சம் குடும்பங்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மத்திய மாகாணமே அதிக பாதிப்புக்குள்ளானதுடன் அங்கு கண்டி மாவட்டத்தில் மட்டும் சுமார் 689 மில்லியன் டொலர் சேதம் ஏற்பட்டுள்ளது. வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவு இதற்கு முக்கிய காரணமாக அமைந்துள்ளது.

வீதிகள், பாலங்கள், புகையிரதப் பாதைகள் மற்றும் நீர் வழங்கல் வலையமைப்புகள் என உட்கட்டமைப்புக்கு மட்டும் 1.735 பில்லியன் டொலர் (மொத்த சேதத்தில் 42%) இழப்பு ஏற்பட்டுள்ளது.

குடியிருப்புகள் மற்றும் வீட்டு உபகரணங்களுக்கு சுமார் 985 மில்லியன் டொலர் சேதம் ஏற்பட்டுள்ளது.

நெல், மரக்கறி பயிர்கள் மற்றும் கால்நடை வளர்ப்பு உள்ளிட்ட விவசாயத்துறைக்கு 814 மில்லியன் டொலர் சேதம் ஏற்பட்டுள்ளது.

அத்துடன் பாடசாலைகள் மற்றும் வைத்தியசாலைகள் உள்ளிட்ட பொதுக் கட்டிடங்களுக்கு 562 மில்லியன் டொலர் சேதம் ஏற்பட்டுள்ளது என்றுள்ளது. (ம-7)


மஹஜன சம்பத — திகதி 2025.12.22 — சீட்டிழுப்பு இலக்கம் 6051 — A 5 0 5 8 4 9

அத சம்பத — A 5 8 4 9 — சீட்டிழுப்பு இலக்கம் 0626 — National Lotteries Board

சுப தவசக் — திகதி 2025.12.22 — சீட்டிழுப்பு இலக்கம் 167 — மிதுனம் 24 33 65 — 1148

தன நிதானய — திகதி - 2025.12.22 — சீட்டிழுப்பு இலக்கம் - 2081 — X 20 61 69 77 X

மெகா பவர் — திகதி 22/12/2025 — சீட்டிழுப்பு இலக்கம் 2399 — B 17 13 24 64 68

ஜய — திகதி 2025.12.22 — சீட்டிழுப்பு இலக்கம் 0319 — J 3 0 4 8

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 4293 — சீட்டிழுப்பு திகதி 22.12.2025 — P 11 22 37 69 — P

HANDAHANA — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2025.12.22 — சீட்டிழுப்பு இலக்கம் 1360 — விருச்சிகம் 11 19 36 38 விருச்சிகம்

வலம்புரி — விளம்பரத் தொடர்புகளுக்கு 076 636 3378, 076 097 3127

உத்தியோகபூர்வ முடிவுகள் — சுப்பர் பல் சம்பத — 22.12.2025 — வெற்றி வாரம் 0759 — F 2 6 1 3 6 3 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.31,069,399.60 — DLB

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 3025 — சீட்டிழுப்பு திகதி 2025.12.22 — தினம் திங்கட்கிழமை — 37 48 64 74 Y — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.83,437,655.20 — DLB

சனிதா — திகதி 22.12.2025 — வெற்றி வாரம் 5186 — 05 11 63 68 R — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 70,458,926.80 — DLB

சசிரி — வெற்றி வாரம் 855 — சீட்டிழுப்பு திகதி 22.12.2025 — திங்கட்கிழமை — 20 40 48 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,000,000.00 — DLB

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4737 — சீட்டிழுப்பு திகதி 22.12.2025 — தினம் திங்கட்கிழமை — 08 14 17 45 கன்னி — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.6,230,642.80 — DLB

கப்ருக — D 15 32 48 59 60 — சீட்டிழுப்பு வாரம் 2201 — 22.12.2025 திங்கட்கிழமை — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.614,818,899.40 — DLB

அட கோடிபதி — ADA KOTIPATHI — திங்கட்கிழமை — வெற்றி வாரம் 2851 — சீட்டிழுப்பு திகதி 2025.12.22 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.69,866,397.60 — 03 09 54 76 L — DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மோடியின்...

ஒரு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இலங்கைக்கு வந்துள்ள ஜெய்சங்கர் இன்று செவ்வாய்க்கிழமை (23) ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மற்றும் பிரதமர் ஹரிணி அமரசூரிய உள்ளிட்ட உயர்மட்ட தலைவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சரின் இந்த விஜயமானது இந்தியாவின் "அண்டை நாடுகளுக்கு முன்னுரிமை" கொள்கையை அடிக்கோடிட்டுக் காட்டுவதுடன் டித்வா சூறாவளியினால் ஏற்பட்ட பேரழிவுகளை முகாமைத்துவம் செய்வதற்காக ஆரம்பிக்கப்பட்ட சாகர் பந்து திட்டத்தின் பின்னணியில் மேற்கொள்ளப்படுவதாக இந்திய வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர், பேரிடர் மீட்புப் பணிகளின் அடுத்தகட்டமான மறுசீரமைப்பு நடவடிக்கைகள் குறித்து ஆலோசிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த ஒருநாள் விஜயத்தில் அவர் வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத் தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளையும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச உள்ளிட்டோரையும் சந்திப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ம-7)


### யாழ்ப்பாணத்தில் Voyzant

கனடாவை தலைமையகமாகக் கொண்ட உலகளாவிய "வொய்சன்" நிறுவனத்தின் சேவைகள்

- விமான பயணச்சீட்டுக்கள்
- பயணக் காப்புறுதி
- விசா சேவைகள்
- வெளிநாட்டு சுற்றுலா

மேலதிக விபரங்களுக்கு: Voyzant(PVT)Ltd
No:617&619, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
(OLR Church இற்கு அருகில்)
077 284 9535, 021 222 6866
(6308)

### மணப்பெண் தேவை

www.thaalee.com என்கின்ற website இல் இயங்கும் எமது திருமணசேவையில் நீங்களாகவே உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவுசெய்து கொள்ளலாம். எம்மிடம் எல்லா ஜாதியிலும் எல்லா மதத்திலும் உள்நாட்டு, வெளிநாட்டு, மாப்பிளைகளும், மணப்பெண்களும் உண்டு. மேலும் unmarried, Divorce என்பனவும், 25 வயதிலிருந்து 65 வயது வரை உள்ளவர்களும் உண்டு.

01. யாழ்ப்பாணம், இந்து, 1985, அஸ்வினி, Bsc in civil Engineering, MBA, Vegetarian மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. Non vegetarian, also considerable. (31575)
02. நல்லூர், இந்து, 1987, அத்தம், BA, Master in social work, Australia citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (32042)
03. கொக்குவில், இந்து, 1988, சுவாதி, MSc, UK Citizen மாப்பிள்ளைக்குப் பெண்தேவை. (48402)
04. கோப்பாய், இந்து, 1995, திருவாதிரை, BBM - Jaffna University மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (54941)
05. தெல்லிப்பழை, இந்து, 1991, பரணி, Engineer(London university), UK citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (53670)
06. உடுவில், இந்து, 1993, பூரம், BSc in Civil Engineering, Project Engineer, Singapore மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (52945)
07. Jaffna Town - வவுனியா, 1993, ரோமன் கத்தோலிக்கம், MBBS Doctor, UK citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (45497)
08. கொழும்புத்துறை, ரோமன் கத்தோலிக்கம், 1993, அத்தம், Msc, UK citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (32886)
09. அளவெட்டி, இந்து, 1993, விசாகம், BSc in Engineering, Australia citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (55831)

(6324)

S.Sharma J.P
www.thaalee.com
077 539 3728, 074 359 3104
011 2523 127

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

### ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-4649)

076 825 7716 (ஆகாஸ்)

### பணியாளர்கள் தேவை

யாழ்ப்பாணம் மற்றும் சுன்னாகத்தில் இயங்கும் முன்னணி நிறுவனம் ஒன்றிற்கு இருசக்கர வாகன திருத்துனர், முச்சக்கர வாகன திருத்துனர் மற்றும் வாகன சுத்திகரிப்பாளர் தேவை. வேலை பயிலுனர்களும் சம்பளத்துடன் வேலைக்கு எடுக்கப்படுவர்.

(6353)

தொடர்பு : 077 041 4051
021 224 2599

### வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் பிரபல ஐஸ்கிறீம் நிறுவனம் ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை.
(ஆண், பெண் இருபாலரும்)

- சிற்றுண்டி பரிமாறுபவர்
- விற்பனைப் பிரதிநிதி
- துப்பரவுப்பணியாளர்

தங்குமிடவசதி வழங்கப்படும். (ஆண்)

(6351)

தொடர்புகளுக்கு: 077 711 1410

### வீட்டுப் பணிப்பெண் தேவை

சாவகச்சேரியில் அமைந்துள்ள வீடொன்றிற்கு சகல வேலைகளும் செய்யக்கூடிய 25 - 40 வயதிற்குட்பட்டோர் தேவை. நல்ல சம்பளம் வழங்கப்படும்.

(6352)

077 124 8425

# காணி விற்பனைக்கு

## யாழ்ப்பாணம் புன்னாலைக்கட்டுவன் நிலாவரை வீதியில் 20 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

நிலப்பரப்பு

- நிலாவரை வற்றாக் கிணற்றில் இருந்து 600m தூரம்
- பலாலி சர்வதேச விமான நிலையம் 4Km தூரம்
- 18 அடிப் பாதையுடன் 2பரப்பாகவும் 3பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி
- நன்னீர் ஊற்றுச் சூழல்
- வீடுகள் கட்டுவதற்கும் அனைத்துவிதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் உகந்த இடம்
- ஒரு பரப்பின் விலை புன்னாலைக்கட்டுவன் நிலாவரை வீதியை முகப்பாகக் கொண்ட காணித்துண்டுகள் 30 லட்சமும் 18 அடிப்பாதையை முகப்பாகக் கொண்ட காணித்துண்டுகள் 25 லட்சம் வரையும் உள்ளது.

(6360)

பார்வையிடும் நேரம் : காலை 6மேணி முதல் மாலை 6மேணி வரை

தொடர்புகளுக்கு: ஜெயம்

077 814 7389, 077 986 5457


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல 191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.12.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org